திராவிடநாடு

13—7—58 | வார வெளியீடு | விலை 16 காசு

# இனத்தை இனம் காக்கும்

( ம. சபாபதி )

இலங்கைமா நகரில் இன்று
இனவெறி பிடித்தோர் பேய்போல்
கலகத்தை மூட்டி விட்டார்;
கதிகெட்டார் தமிழர் அங்கே!
கொலைகளும் கொள்ளை போன்ற
கொடுமையும் பெருத்த தாலே
நிலைகெட்டார்; மானங் கெட்டார்
நீதியே எங்கே சென்றாய்?

செந்தமிழ் நாட்டு மக்கள்
சிங்களர் செய்தி கேட்டார்
நொந்தனர் மனசு நோக
நடுங்கினர் திகைத்து நின்றே
பைந்தமிழ் மக்கள் வாழ்வு
பறப்பதோ தெருவில் என்று
செந்தமிழ்த் தோழர் எல்லாம்
சேர்ந்தனர் உரிமை காக்க.

நடந்ததை எட்டில் கண்டும்
நடுக்கமே சிறிதும் இன்றி
உடம்பிற்கு ஓய்வு தேட
'குளு'வுக்கு சென்றார் நேரு.
காட்வது என்று கேட்டு
வாழ்வளிக்க ஓடும் நேரு
துடிக்கின்ற தமிழர் மாசை
துடைத்திட மறுப்ப தேனோ?

# தமிழ் வென்றது

[கா. வேழவேந்தன்]

மாலை வந்தது. சோலையிலே பூத்திருந்த மலர்களெல்லாம் ஒன்றையொன்று நோக்கிச் சிரித்துக்கொண்டன. பொதியமலைத் தென்றல் வந்து அவற்றின் செவிகளில் ஏதோ சொல்லிவிட்டு தன்வழியே சென்று கொண்டிருந்தது. அதற்கு 'ஆமாம், ஆமாம்' என்று தலையாட்டுவனபோல அத்தனை மலர்களும் ஆடிக் கொண்டே இருந்தன.

அவள் வந்தாள். கொய்யாத மலர்களைச் சேர்த்துத் தன் கையால் அணைத்தாள். அவள் விழிகளிலிருந்து உதிர்ந்த முத்துத் துளிகள் அந்த மலர் இதழ்களில் விழுந்து தெறித்தன. அவள் வாய் ஏதேதோ பேசியது,

"நறுமணம் தரும் மலர்கள் என் நிலையைப் பார்த்து நகைக்கின்றன! குளிர் ஊறும் தென்றல் என்னைத் தொட்டிழுத்துவிட்டு, கைகொட்டி நகைத்துக்கொண்டே செல்கிறது! கோலமயில் எழில் மங்கிய என்னை வென்றுவிட்ட கொண்டாட்டத்தில் துள்ளித் துள்ளி ஆடுகிறது! குரலே எழாத நிலையில் இருக்கிறேன் என்பதை உணர்ந்துவிட்ட அந்தப் பொல்லாத குயில் ஓயாமல் பாடித் தீர்க்கிறது! கும்மியாடுவதற்குத் தம் காதலருடன் என் தோழியர் கூட்டம் கூட்டமாகச் செல்கிறார்கள்! ஆனால்நான்? நீரில்லா ஆறாக, நிலவில்லா வானமாக அவரில்லாமல் கொஞ்சம் கொஞ்சமாக நைந்து மடிகிறேன். பாழும் நெஞ்சமே! நீ ஏன் வாய்மூடிக் கிடக்கிறாய்? சென்றவர் எங்கே? திரும்பவேமாட்டாரா? என்னை முழுக்க முழுக்க மறந்தேவிட்டாரா?" அவள் இப்படி நெஞ்சைக் கேட்டாள்.

"இல்லை! உன் காதலன் நெஞ்சம் பாலை நிலத்து மணல் வெளியென்று நினைக்கிறாய்? சுழற்காற்று வீசியவுடன் நடந்து சென்ற சுவடுகளே கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிட! அவன் நெஞ்சம் தங்கத் தட்டால் ஆனது; அதிலே இழுக்கப்பட்ட கீரல், தட்டே அழிந்தால்தான் அழியும்! உறுதியாகச் சொல்கிறேன்! ஓயாமல் ஏன் புலம்புகிறாய்? அவன் நெஞ்சத்திலிருந்து என்றுமே உன்னை மறக்கவில்லை —மறைக்கவில்லை— மறுக்கவில்லை!" இப்படி ஆறுதல் கூறியது அவள் இளநெஞ்சு!

"மறந்திருக்கவில்லையென்றால், எங்கே சென்று மறைந்திருக்கிறார்? ஒன்றுமே புரியவில்லையே! ஒருவேளை அடுத்த நாட்டுப் பகைவருடன் மோதல் ஏற்பட்டு அன்னை நாட்டின் மானங்காக்க எனக்குரிய உயிரை என்னைக் கேட்காமலேயே பணயம் வைத்துவிட்டாரோ? நினைக்கவே முடியவில்லையே என்றால்! நெஞ்சே! இதுதான் நடந்திருக்குமா?"

"இல்லை! ஏன் உன்னை நீயே நெருப்பில் தூக்கிப் போட்டுக்கொள்கிறாய்? உன் உள்ளங்கவர்ந்தவனின் வைரமேறிய தோள்களின்மீது உனக்கு ஏன் உறுதிப்பாடு இல்லை? மாறன் வழுதியின் நாட்டிலே பிறந்தவனுடைய மறப்பண்பிலே எப்படி உனக்கு ஐயப்பாடு ஏற்பட்டது? வெற்றியன்றி வேறறியா மாவீரன் உன் காதலன்! எனவே மீண்டும் உன் வலிவு குன்றிய நாவினால் இப்படியெல்லாம் சொல்லாதே!"

"சொல்லவில்லை! அப்படியென்றால் என் அன்பையெல்லாம் வாரிக் கொண்டுபோன அவர் எங்கே? எத்தனை நாட்கள் மொத்தமாகக் கழிந்துவிட்டன? ஒருவேளை இல்லறவாழ்வே கூடாதென்று நல்லுலகம் தேட, காவியுடுத்துக் கமண்டலம் ஏந்திப் புறப்பட்டு விட்டாரோ? அப்படி என்றால் இனித் திரும்பவா போகிறார்?"

"சேச்சே! உன் கற்பனை ஏன் இத்தனை தாழ்வாகச் செல்கிறது? அவன் தமிழ் இனத்திலே வந்தவன்! அவன் உடலிலே ஓடுவது தமிழ்க் குருதி! அந்த அறியாமைப் படுகுழியில் விழவேண்டுமென்றால், அவனுக்கு மூளைதான் குழம்பவேண்டும்! ஆனால் இன்னும் அவன் தன்னுணர்வுடனேயேதான் இருக்கிறான். எனவே அஞ்சி அஞ்சிச் சாகாதே! உலகைத் துறக்கும் ஊதாரியல்ல, உன் ஒப்பற்ற காதலன்!"

"பாழும் நெஞ்சே! எல்லாவற்றிற்கும் ஏதேனும் பதில் சொல்லிவிடுகிறாய்? வாடுகின்ற என் கண்களுக்கும், தேய்கின்ற என் கைகளுக்கும் என்ன பதில் சொல்லச்சொல்கிறாய்? என்னை அவர் மறந்தார் என்றால் ஒருவேளை என்னைப்போன்றவள் ஒருத்தி, இடையிலே வந்து அவரை..."

"சீச்சீ! மதிகலங்கிய நீ அவன்மீது எத்தனை எத்தனை மாசு கற்பிக்கிறாய்? கன்னித்தமிழ் நாட்டிலே வந்தவன்தான் உன் கண்ணாளன்! அவன் நெஞ்சக் கோயிலிலே ஒரே ஒரு உருவத்திற்குத்தான் இடம் உண்டு; மீண்டும் சொல்கிறேன். அவன் அயலார் பண்பை தூசுக்கும் மதிக்காதவன்! உன்னைக் கைவிடமாட்டேன் என்று கூறிய அவன் உலகமே அழிந்தாலும் வேறு பெண்களைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டான்! கல்லையெடுத்து கையை ஏன் குத்திக்கொள்கிறாய்? கவைக்குதவாத கற்பனைகளால் அவன் ஒழுக்கத்திற்கு ஏன் இழுக்குத் தேடுகிறாய்?"

"குறும்பு நெஞ்சே! என்னை ஏன் கொல்லாமல் கொல்லுகிறாய்? அவர் எந்த நிலையில் எங்கே இருக்கிறார் என்று நீயும் எனக்குச் சொல்லமாட்டாய்? என்னையும்பேசவிடமாட்டாய்? அப்படி என்றால் வழிதான் என்ன? இறுதியாக அவரைப்பற்றி எனக்கு ஒரே ஒரு எண்ணம்தான் தோன்றுகிறது! என்னைப்பிரிந்த அவர் எங்கோ பொருள்தேடச் சென்றிருக்கிறார்; எதிர்பார்த்த அளவு பொருள்சேர்க்க இயலவில்லை; திரும்பிவந்தால் எங்கே நான் குறைத்து மதிப்பிடுவேனோ என்று எண்ணியிருக்கிறார்; எப்படி என் முகத்திலே விழிப்பது என்று கருதித் தன்னையே தான் அழித்துக் கொண்டிருக்கிறார்......"

"பிதற்றாதே! பெண்தானே நான் என்பதை உன் பிற்போக்கான கற்பனைகளால் காட்டிவிடுகிறாயே! உன் அத்தான் என்ன அத்தனை நெஞ்சுரமற்றவன் என்று நினைத்துவிட்டாய்? 'வையை' நீரைப் பருகியவன் என்றுமே கோழையாக வாழ்ந்ததில்லை! பஞ்சு மனம் கொண்டவன்தான் உன்னைக் கவர்ந்த அந்தப் பண்பாளன்; ஆனால் இப்படி அற்பத்திற்கெல்லாம் ஆவியைத் துறந்துவிடும் எலும்புகளே இல்லாத மனிதக்கூறு அல்ல, அவன்! அந்தப் பீடுநடைக்காரன் நீ நினைப்பதுபோல் ஒன்றும் பிணமாகி இருக்கமாட்டான்!"

"ஐயோ! வாடா மலரே என்றழைத்துப் பின் என்னை வாடவிட்டுப் போன அவர் ஏன் வரவில்லை? நெஞ்சே! உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன்! எங்கேதான் சென்று, என்றுமே திரும்பிவராத நிலைபெற்றுவிட்டார் அந்த இரக்கமே இல்லாதவர்?"

"பேதைப்பெண்ணே! சுற்றுலாச் சென்றவன் மதுரைக்குச் செல்வதாகச் சொன்னானே, நினைவிருக்கிறதா?"

"ஆமாம்!"

"தேனூறும் தமிழ் மணக்கும் சங்கத்தில் சென்றுதான் அவன் ஈடுபட்டிருக்கவேண்டும்! அவனுடைய மதியை மயக்க அமுதனைய தமிழ் ஒன்றால்தான் இயலும்! மதுரை சென்ற உன் காதலன் மதுரத் தமிழ் உண்ட வண்டாக மாறிவிட்டான்! புரிகிறதா?"

"தெரிகிறது. இது முன்பே தெரிந்திருந்தால் மதுரை இருக்கும் திக்கிலேயே அனுப்பியிருக்கமாட்டேன்! ஐயோ! கன்னித்தமிழே! நீதானா என் காதலைத் தீய்ப்பது."

விழிநீரையும் துடைக்காமல் வெறிபிடித்தவள் போலத் திரும்பினாள் அந்தத் தலைவி. மலரைத்தேடி ஓடிவந்த வண்டொன்று அவள் முகத்திலே மோதிச்சென்றது! ★

# தூத்துக்குடி தேர்தல்

ர் 16]    ஆண்டு சந்தா ரூ. 8    [13-7-58]    தனிப் பிரதி 16-காசு    [இதழ் 52

தூத்துக்குடியில் சட்டமன்ற உறுப்பினர் தேர்தல் நடக்க இருக்கின்றது. இடைக்காலத் தேர்தல் என்றாலும், அதனுடைய வெற்றியை நாடிப்போட்டியிடும் கட்சிகள்பாடுபடுவது தெரிந்ததே. இதன் வெற்றி தோல்வியால் சட்டமன்றத்தின் உறுப்பினர் தொகையில் பெருத்த மாறுதல் ஏதும் விளையாது என்றாலும், இந்தத் தொகுதியின் தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். காங்கிரசை மக்கள் ஆதரிக்கின்றார்கள், அவர்கள் இடும் கட்டளைகளை ஏற்றுக் கொள்ளுகின்றனர் — என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லிவருகின்றனர். மக்களை மதியாமல், மக்களின் எண்ணங்களை மதியாமல், நாட்டு நலனிலும், அக்கரையின்றி ஏதேதோ செய்திடுகின்றனர். தேர்தல் காலத்தில் வாக்காளர்களை—மக்களை அல்ல; வாக்காளர்களை—தங்கள்பால் ஈர்த்துக்கொள்ளும் வகையைத் தேடி எப்பாடுபட்டோ, எவ்வழி முயன்றோ வெற்றி பெற்றாகவேண்டும் என முனைந்து நின்கின்றனர். உண்மையான மக்கள் ஆதரவு அவர்களுக்கு இல்லை என்றாலும், வாக்காளர்களின் ஆதரவு இருக்கிறது என்று பெருமைப் படுகின்றனர்.

இதற்கு அடிப்படை, காங்கிரஸ் கட்சி பெற்றிருக்கும் பணபலமே முக்கிய காரணம் எனலாம். பணத்தால் எதையும் செய்திட இயலும் என்றெண்ணி அவர்கள் பணத்தின்மீது தங்கள் கட்சியைக் கட்டிவைத்திருக்கின்றனர். உண்மையான மக்களின் உணர்ச்சி மேல் எழுந்து, உண்மையினை உணரும் தெளிவு பிறந்திட்டால் பணம் அதன் முன்னே நிற்காமல் பஞ்செனப் பறந்தோடிவிடும்.

ஆனால் இன்றைய சூழ்நிலையில் அந்த நிலை நம்முடைய நாட்டிலே ஏற்படவில்லை. அதனால் மக்களின் ஆதரவு இல்லாவிடினும் பணத்தின் ஆதரவு இருக்கும் காங்கிரஸ் கட்சி பெருமை பேசுகின்றது.

அந்தக் கட்சியை நாம்—தி. மு. க. எதிர்க்கின்றோம். கொள்கைகளின் பெயரால் எதிர்க்கின்றோம். நாட்டு நலன் வளர உண்மையான மக்கள் குரல் ஒலிக்க வேண்டும் என எதிர்க்கின்றோம். காங்கிரஸ் கட்சியைப்போல் நாம் காரிருளில் பணத்தினை நாடப்போவதில்லையென்றாலும், அடிப்படைத் தேவைக்கான பணம் வேண்டுமல்லவா? மக்களைச் சென்று சந்திக்க, செய்திகளைச் சொல்லிட, சுவரொட்டிகள் அச்சிட, என்று இன்றியமையாத கடமைகளைச் செய்யவும் பணம் இன்றி இயலாது என்பதை நாம் உணர்வோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் மக்களின் தேசீய இயக்கமாதலினால், இதற்கு வேண்டிய உதவிகளைச் செய்வது மக்களின் கடமை என இதுநாள் வரை மக்களே அவ்வப்போது கை கொடுத்து கழகத்தைக் காத்துவருகின்றனர். அந்த முறையில் தூத்துக்குடித் தேர்தலுக்காகும் செலவுகளை ஈடு, செய்வதற்காகத் தலைமை நிலையம் வேண்டுகோள் விடுத்தவுடன் சென்னையில் மக்கள் ஆதரவு தந்த செய்தியினையும், கோபி மாநாட்டில் உண்டியலில் போட்ட பெருந் தொகையினையும் கண்டும், கேட்டும், தமிழக மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திடம் கொண்டுள்ள நம்பிக்கையினையும், காட்டிடும் ஆதரவினையும் நாம் அறிந்து பாராட்டுகின்றோம்.

அதோடு மேலும், இன்னும் தங்கள் பங்கைச் செலுத்தாத தோழர்களும், ஆதரவாளர்களும் உடனடியாகத் தங்களால் இயன்ற உதவிகள் அனைத்தையும் விரைந்து செய்ய வேண்டுகின்றோம். உடலால், பொருளால் இயன்ற உதவிகளைச் செய்யத் தேர்தல் நிறைய வாய்ப்பளிக்கும். தொண்டர்களாகப் பணியாற்றுவதும், தொகை சேர்த்துத் தருவதும் காலத்தால் செய்யத்தக்க உதவிகளாகும். காலத்தால் செய்த உதவி ஞாலத்தின் மாணப் பெரிது என்பது தமிழர் கொள்கை.

நாட்டு நலனில் அக்கறைகொண்ட திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெறப் பாடுபடுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

★

# நாகியின் பரிதாபம்!

1956-ம் ஆண்டு, அங்கேரியா மீது, அங்குள்ள சர்க்கார் வரம்பு மீறிப்போவதாகக் குற்றம்சாட்டித் தன் படைகளை அனுப்பிற்று ரஷ்யா! வெண்புறுக்களைப் பறக்க விட்டுக்கொண்டும், அணுகுண்டுகளைத் தயாரிக்கும் வெறிபிடித்த அமெரிக்காவின் சதிகளை அம்பலப்படுத்திக்கொண்டும், நேருவுடன் பஞ்சசீல உடன்பாடு செய்துகொண்டும் பவனி வந்த இதே சமயத்தில்தான், படைகளையும் இன்னொரு நாட்டிற்கு அனுப்பிற்று!

அங்கேரியை ஆண்ட பிரதமர் நாகி என்பாரும், வேறு சிலரும், ருஷ்யாவின் எடுபிடிகளாயிருக்க மறுத்ததே, இந்த ஆக்கிரமிப்புக்குக் காரணம் என்று சொன்னார்கள். மாஸ்கோவின் புதிய ஸ்டாலினாக உருப்பெற்ற குருஷேவுக்கு நாகி, பிடிக்காததன் விளைவே இந்த ஆக்கிரமிப்பு என்று சொல்லப்பட்டது. "இது ஆக்கிரமிப்போ, படையெடுப்போ அல்ல; அமைதியை நிலைநாட்டும் ஒரு செயல்" என்று ரஷ்யாவின் சார்பில், செய்திகள் தரப்பட்டன!

உலகின் மிகப்பெரும் வல்லரசுகளில் ஒன்றான ரஷ்யாவின் பலம் கண்டு அந்தச் சின்னஞ்சிறு நாட்டு அதிபர் நாகி, ஓடினார் நாட்டைவிட்டு அண்மையிலுள்ள யுகோஸ்லோவியா நாட்டிற்கு. (இதுவும், ஒரு கம்யூனிச நாடு தான்! ஆனால், ரஷ்யாவைப் போன்றதல்ல!!) தூதராலயத்துக்கு ஓடி, சரண்புகுந்தார். நாகியும், அவரது சகாக்கள் சிலரும், யுகோ சர்க்காரின் தயவில் 19-நாட்கள் இருந்தார்கள். அதற்குள், அங்கேரியில், மாஸ்கோவின் சொல் கேட்கும் ஒரு அரசு ஏற்பட்டுவிட்டது. அந்த அரசு, யுகோ சர்க்காருடன், "நாகியையும் அங்கு வந்திருப்பவர்களையும் வெளியே அனுப்பிவையுங்கள். பழி வாங்கமாட்டோம். அந்த உத்தேசமில்லை" என்று சொல்லி உறுதி தந்தது. பொதுவுடைமைக் கொள்கைகளில் பற்றுக் கொண்டவரும், அதே சமயம் கொள்கைக்காக மனித மாண்பை இழத்தலாகாதெனும் போக்குக் கொண்டவருமான யுகோவின் தலைவர் டிட்டோ மேற்படி நிபந்தனைகளைப் பெற்றுக்கொண்டு நாகியையும் பிறரையும் வெளியே அனுப்பி வைத்தார்! அவர்கள் எடுத்தடி வைத்ததும், ருஷியப் படை அவர்களைப் பொறுப்பேற்றுக் கொண்டது; எங்கேயோ கொண்டு சென்றுவிட்டது!! "இது நியாயமா? சொன்ன சொல் மீறலாமா! ஒழுங்கா?" என்று யுகோ சர்க்கார் மாஸ்கோவைக் கேட்டது. "நாங்கள் எதுவும் செய்துவிடவில்லை, ருமேனியாவில் கொண்டுபோய்ப் பத்திரமாக வைத்திருக்கிறோம்" என்பதுபோல, மாஸ்கோவிலிருந்து பதில்கள் தரப்பட்டன.

ஜெனரல் மெலடர் என்பார், நாகி பிரதமராயிருந்தபோது, இராணுவத் தளபதியாக இருந்தவர். அங்கேரியிலிருந்து ரஷ்யப் படைகள் "வாபஸ்" ஆவதுபற்றிப் பேச வருமாறு அவரை அழைத்தார்கள். போனார்; போனவர், திரும்பவில்லை. அவரையும் எங்கோ மறைவான ஒரு இடத்துக்குக் கொண்டுபோய் விட்டதாகச் சொல்லப்பட்டது. நாகியையும், மெலடரையும் அவர்தம் தோழர்களையும், எங்கே வைத்தார்கள், எப்படி வைத்திருந்தார்கள் என்கிற தகவலேயில்லை. காணமத்தில் நம்பிக்கைவைத்த, யுகோ திகைத்தது! அது மட்டுமல்ல, அங்கேரிய சர்க்காருக்கே, தகவல்கள் இல்லையாம் — அந்தளவுக்கு, இரகசியமாக, மாஸ்கோ அவர்களை வைத்திருந்தது!! கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம், அங்கேரியப் பிரதமர் காடார் என்பார் பேசும்போது, "கோடைவாசம் செய்துகொண்டிருக்கிறார்கள்" என்று உலகுக்குச் சொன்னார்.

இப்போது சேதி வருகிறது! அங்கேரியாவின் தலைநகரிலே இருந்தல்ல; மாஸ்கோவிலிருந்து, நாகி, கொல்லப்பட்டுவிட்டார் என்று!! "மரண தண்டனை பெற்றார்", என்பதுதான் செய்தி. என்றாலும், நடந்த விபரங்களைப் பார்க்கும்போது, "கொல்லப்பட்டார்" என்பதே பொருத்தமாகும்!

* * *

தண்டனை அளிக்கப்படுமுன், விசாரணையும் நடைபெற்றதாம். எப்படி நடந்ததாம், விசாரணை தெரியுமா?

**இரகசியமாக, நடக்குமுன் யாருக்கும் சொல்லாமல், தீர்ப்பு என்னவென்று உலகுக்குத் தெரிவிக்கப்படாமல்**

நடைபெற்றிருக்கிறது! உலகுக்கு, அவர்கள் கொல்லப்பட்ட பிறகு தான், இப்படி ஒரு விசாரணை நடைபெற்றதாகவும் சொல்லப்படுகிறது!

தேங்காய்க் குலைகளை அறுப்பது போல், நேற்று ஒளி விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்த அரசியல் தலைவர்களை அறுப்பதும் அவர்தம் சமாதிகளைத் தோண்டிப் பறித்துச் சாணிகளைக் கொட்டுவதும் மாஸ்கோவிலிருந்து நாம் அடிக்கடி கேள்விப்படும் சேதிகள் ஆகும். மாஸ்கோவின் மண... பற்றியும், அங்குள்ளோர் நடத்திய வீரப்போர் குறித்தும், அங்கு நடைபெறும் அரசாங்கத்தின் ப... மாண்புகளைப்பற்றியும், சிரவணம் செய்வோர் நாம். எனினும் "மனிதன்", என்கிற உருவுக்...

(15-ம் பக்கம் பார்க்க)

# சூழ்ச்சியின் வீழ்ச்சி

இலண்டன் மாநகரம் அன்று துக்கத்திலாழ்ந்திருந்தது. மக்கள் முகமும் அகமும் சோகத்திலேயே காணப்பட்டது. 'காதரின்' இன்னும் இன்பத்தின் வாயிற் படியைக் கூட அடையவில்லையே; அதற்குள் இந்நிலையா என்றனர் ஒரு சாரார். "விதி யாரை விட்டதுஎன்றனர் மற்றொருசாரார். அதோ மாவீரன்! மக்களின் தலைவன்! மாசிலா உள்ளங்கொண்ட ஆர்தரின் சவம் வந்துகொண்டிருக்கிறது; முன்னே இராணுவம் அணி வகுத்து வருவதும், பின்னே தந்தையும் ஏனையோரும் அழுது புலம்பிவருவதும் கல்நெஞ்சனையும் உருகச்செய்தது.

இங்கிலாந்து மன்னன் ஏழாம் ஹென்றி நட்புக்கொள்ளும் முறையில் ஸ்பெயின் நாட்டுப் பேரழகி காதரின் என்பாளை, தன் மூத்த மகன் ஆர்தருக்கு மணமுடித்து வைத்தான். நட்புக்கு நல்லதைச் செய்த அவன் எண்ணம் நிறைவேறாதபடி மணம் முடிந்த முப்பதாம் நாளிலேயே ஆர்தர் மாரடைப்பால் மாண்டான். இந்தத் துன்ப நிகழ்ச்சிதான் இலண்டன் மாநகரிலே முன்னே கூறியாங்கு நிகழ்கிறது.

காதரின் கட்டழகி மட்டுமல்ல! கற்றோர் போற்றும் கலையரசி! மக்கள் போற்றும் மாண்பரசி! பொறுப்புள்ள கற்பரசி! நுண்ணறிவு கொண்ட பெண்ணரசி! தங்க நிறத்தோடு தங்க உள்ளங்கொண்ட காதரின் பற்றுக்கோடில்லாக் கொடியாக வாடுவதைக்கண்டு கவலைப்பட்டோர் பலருண்டு! ஆனால் அவள் படும் கவலையைப்போக்க முற்பட்டவர் உல்ஸியைத் தவிர வேறுயாருமில்லை!

அரசன் அமைச்சர்களுடன் அமர்ந்துகொண்டிருக்கிறான். எட்டாம் ஹென்றியுடன் நுழைகிறான் உல்ஸி! உல்ஸியிடம் உன்னதக் கொள்கைகள் எப்போதும் உண்டு என்பதை உணர்ந்தவன் மன்னன். எந்தப் பதவியும் இல்லாமல் மன்னனிடம் அதிகம் செல்வாக்குப் பெறுகிறானே என்று பொறாமை கொண்டவன் அமைச்சன் எட்வர்ட்.

உல்ஸி வருகையால் அமைச்சரவைக் கூட்டம் அத்தோடு முடிகிறது. எட்வர்ட் வஞ்சகக் கணகளோடு வெளியேறுகிறான்.

வித்துவான் M. A. கிருஷ்ணன்

"மன்னா! நாட்டின் நலனையும் பெண்ணின் நலனையும் எண்ணித் தங்களிடம் ஒன்று வேண்டுகிறேன்" என்றான் சிறிது அச்சத்தோடு......

"உல்ஸி! உன் எண்ணம் எதுவானாலும் நிறைவேற்றுவது என் பொறுப்பு; கூறுக என்றான்" கனிவோடு.

"அரசே! தாங்கள் ஆத்திரப்படாமல் சிந்திக்கவேண்டுகிறேன்" என்றான் பணிவோடு......

நீ சிந்திக்காமல் கூறமாட்டாய் என்பது எனக்குத் தெரியும். சிறிதளவும் சிந்திக்கவேண்டியதில்லை. செய்தியைச் சொல்!

"காதரின் நிலைமைத் தாங்கள் நன்கு உணர்வீர்களே" என்று குறிப்பிட்டபோது மன்னன் முகம் மாறுபட்டது. உல்ஸி தொடர்ந்து, அவள் கணவனைத்தான் இழந்தாளேயன்றி அழகையோ, உணர்ச்சியையோ இழந்துவிடவில்லை!" என்றான்.

"பரமன் கட்டளை அவ்வாறிருக்க நாம் என்னசெய்ய முடியும்" என்றான் மன்னன் அனுதாபத்தோடு ......!

"இதைப்போக்க வேறு வழியே இல்லையா?" என்று ஒரு வினாவை எழுப்பினான் உல்ஸி!

பரமண்டலத்தில் இருக்கும் பரமபிதாவின் வழிபாட்டால் அவள் எண்ணம் மாறுவதோடு, மறு பிறவியிலாவது கணவனோடு வாழ வழிஇட்டும்.

"மன்னா! மறுபிறப்புக்குப் பின்பு அதற்குவழிவகுப்போம். காதரின இப்பொழுது தனிமையாய் இருப்பதை மாற்றவேண்டும்."

"நீ சொல்வது ஒன்றும் புரியவில்லையே."

"அரசே! காதரின் அழுது அழுது புலம்புவதையும், அவள் தங்க மேனி நாளும் மங்கி வருவதையும் மாற்றவேண்டும். அதற்கு ஒரே வழி எட்டாம் ஹென்றி காதரினை மணக்கவேண்டும்."

மன்னன் முகத்தில் உடனே வியர்வை தோன்றியது. மீசை துடிதுடித்தது. கண்களில் சிவப்பு ஏறிக்கொண்டது. "உல்ஸி! யாரிடம் பேசுகிறோம் என்பதை மறந்து பேசிவிட்டாய். வழி வழியாக வளர்ந்துவரும் மதநம்பிக்கை

களை குழிதோண்டிப் புதைக்க உன் மனம் எப்படி ஒப்பியது? விதவையை இளவரசன் மணந்ததாக வரலாறு உண்டா?'' என்றான் ஆத்திரத்தோடு......

''மத நம்பிக்கைக்கு நான் எப்பொழுதும் மாசுதேட மாட்டேன். காதரின் விதவை என்ற பட்டம் கொண்டுள்ளாளே தவிர, அவள் விதவையல்ல, அதை உணர்ந்து தான் இதற்குப் போப்பும் மனம் ஒப்பினார்.''

''என்ன 'போப்' ஒப்புக்கொண்டாரா!'' என்று வியப்போடு வினவியபடியே, இளைய மகனை நோக்கினார். கலையரசியைத் துணைவியாகக்கொள்ள விரும்பும் அவன் முகத்தில் இன்பம் படர்ந்திருந்தது. மன்னன் அகமும் மாறுபடத் தொடங்கியது.

எட்டாம் ஹென்றி காதரினை மணப்பதற்கு போப்பாண்டவர் அனுமதி அளித்துவிட்டதும், ஜுன் நான்காம் நாள் திருமணம் நிகழவிருக்கிறது என்பதும் காட்டுத் தீ போல் நாடெங்கும் பரவியது. பேரழகி வாழ்வு மீண்டும் மலர்கிறது என்பது மட்டுமின்றி, ஸ்பெயின் நட்புக் கயிறுகள் மீண்டும் இணைக்கப்படுகிறது என்பதால் மக்கள் மகிழ்ச்சி மேலும் ஒரு படியைக் கடந்திருந்தது.

அன்று மூன்றாம்நாள் இரவு இலண்டன் மாநகரம் பலவகைகளிலும் அலங்கரிக்கப்படுகிறது. இளவரசன் இணையற்ற வாழ்வு பெறுவதை எண்ணி இரவெல்லாம் திருமணப் பணியில் ஈடுபட்டிருந்தான். உல்சி அவனுடன் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தான். கலையரசி காதரின் இன்பத் தால் இசைபாடிவிளையாடித்தோழியோடுஉறவாடிக்காலத்தைக்கழித்துக் கொண்டிருந்தாள். மணி பன்னிரண்டைக் கடந்தும் அவள் அன்று உறங்கவில்லை. தோழியர்கள் தலைவியின் நலனையெண்ணித் தூங்கவைத்தனர்.

மாதாவின் கோவிலில் மணி மூன்றடித்தது. காதரின் அறையைச் சுற்றிலும் முழு அமைதி காணப்பட்டது. எல்லோரும் உறங்கிக்கொண்டிருந்தார்கள். விழியழகி அழகிய பஞ்சணையில் துஞ்சிக்கொண்டிருக்கிறாள், வெண் திங்கள் சன்னல் வழியாக அவள் முகத்தைப்பார்த்துக்கொண்டிருந்தான். அது அவள் புன்னகை முகத்தைப் பொலிவு படுத்தியது. வெண்ணிலவு புகுந்த சன்னல் வழியாகக் கம்பளி போர்த்த இரு உருவங்கள் குதித்தன. அவர்கள் கை இளவரசியை ஏனோ நோக்கிச் சென்றன. சின்னேரத்தில் அவர்கள் ஒத்துழைப்புக்கு இரு பெண் மணிகள் உடன் கலந்தனர். இளவரசி இப்பொழுது மாடிப்படியின் மறைந்த வழியில் தூக்கிச்செல்லப் படுகிறாள். அந்த இரு உருவங்களும் அவர்களால் தூக்கிச் செல்லப்பட்ட ஸ்பெயின் நாட்டுச் செல்வியும் மறைகிறார்கள்.

அரண்மனையின் அடுத்த பகுதியில் இருந்த உல்சியிடம் இரு பெண்மணிகள் ஓடோடி வருகின்றனர். அவர்கள் உல்சியின் காதில் ஏதோ மொழிகின்றனர். உல்சி வியப்பும் துடிதுடிப்பும் கொண்டு குதிரையிலே விரைகிறான். இளவரசியைத் தூக்கிச்சென்ற குதிரையை அவன் நெருங்குவதும், அவர்கள் விரைந்து செல்வதும் தொடர்ந்து துரத்துவதும் நிகழ்ந்துகொண்டிருந்தது.

திருமணப் பெண்ணை இழந்த அரண்மனை அல்லோலப்பட்டது. மணவிழாவுக்கு இன்னும் இரண்டு மணிகளே உள்ளன. ஆனால் மணப்பெண் இல்லை.

''உள்ளதைச் சொல்லுங்கள், இல்லையே உடலை உரித்துவிடுவேன்'' என்று தோழிகளை நோக்கி உறுமினான் இளவரசன்.

தோழியரின் முகத்தில் அழுகையும் அமைதியும் தவிர வேறொன்றும் அவன் காணவில்லை. ''என்ன! உங்களுக்கு உயிரின்மீது ஆசையில்லையா? எப்படி எங்கே போனாள் என்று சொல்லுவதற்கு உங்களால் முடியவில்லையா?''

மீண்டும் அமைதியே காணப்பட்டது. இளவரசனுக்கு ஆத்திரம் தாங்கவில்லை. கையில் இருந்த சவுக்கு அணிவகுத்து நின்ற தோழியரின் உடலில் பாய்ந்தது.

ஐயோ என்ற அவர்கள் அலறல் அரண்மனையையே அதிரச் செய்தது.

''இளவரசே! இரவு நெடுநேரத்திற்குப் பின்பே உறங்கத் தொடங்கினோம்'' என்று கூறினாள் ஒருத்தி.

இளவரசி பஞ்சணையில் படுத்து உறங்கிய பின்பே நாங்கள் உறங்கினோம் என்றுரைத்தாள் பிறிதொருத்தி.

உறக்கத்திற்குப் பின் என்ன நிகழ்ந்தது எனபதை அறியோம் என்றாள் இன்னொருத்தி.

செய்தி கேட்ட மன்னனும் அமைச்சன் எட்வினும் ஆங்கு வந்து சேர்ந்தனர். ''இளவரசே! இவர்களை இப்படிக் கேட்டால் சொல்லமாட்டார்கள்'' என்று சொல்லிக்கொண்டே சவுக்கைக் கையிலெடுத்தான் அமைச்சன் எட்வின்.

''ஆயுதந்தாங்கிய ஆடவர்கள் அரண்மனையைச் சுற்றி ஆயிரம் பேரிருந்தும், இளவரசி போனதைக் கண்டுபிடிக்க முடியவில்லை! வன்மையில்லா ஆண்மையை மறைப்பதற்கு எங்களைப்போன்ற பெண்களா பயன்படவேண்டும்' என்று துணிந்து உணர்ச்சியுடன் பேசினாள் ஒரு தோழி.

முகத்திலடித்தாற்போன்ற அவள் சொற்கள் எட்வினுக்குச்

## நமது அனுதாபம்

30—6—58 மாலை சென்னை அறிவகத்தில் கூடிய தி. மு. க. செயற் குழுவில், போடப்பட்ட முதல் தீர்மானம்:-

தேசியப் போராட்டத்தில் சிறந்த பணியாற்றியவரும், பின்னர் காங்கிரஸ் ஏகாதிபத்திய ஆட்சி முறையைத் தீவிரமாக எதிர்த்து வந்தவரும், தொழிலாளர் தலைவருமான திரு: சக்கரை (செட்டியார்) அவர்களும், மருத்துவத்துறையில் மேதையாக விளங்கிவந்தவரும், கல்வித் துறைக்குப் பேருதவி புரிந்துவந்தவருமான டாக்டர் குருசாமி (முதலியார்) அவர்களும் இயற்கையெய்தியமை குறித்து மிகவும் வருந்துவதுடன், அவர்களது குடும்பத்தாருக்கு இச் செயற்குழு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

சினத்தை உண்டாக்கினாலும், அதைக் காட்டிக் கொள்ளவில்லை. முன்னால் இருந்த தோழியர் இருவரை "உம் நடந்ததை சொல்லுங்கள். நீங்கள் தானே இளவரசியின் முதல் தோழிகள்" என்று வினவினான்.

அவர்களும் ஏதோ சொல்லத் தொடங்கி அச்சத்தின் காரணமாக அடங்கிக் கொண்டனர்.

"அச்சமின்றிக் கூறுங்கள் உங்களுக்கு எந்தத் தீதும் ஏற்படாது. இதோ மாபெரும் மன்னர் பெருமான் இருக்கிறார்! மாண்புக்குரிய இளவரசர் இருக்கிறார்! நன்மை நாடும் நானிருக்கிறேன்" என்றான் அமைதியாக.

"மன்னா! நாங்கள் நள்ளிரவில் நன்கு உறங்கிக்கொண்டிருந்தோம். மாதா கோவில் மணி மூன்றடித்தது. எங்கள் அறைக்குள் ஏதோ உருவமொன்று நுழைந்தது. அதன் கையில் பளபளவென்று ஒரு கத்தி காணப்பட்டது. அச்சத்தின் காரணமாக ஐயோ என்று அலறினோம், ஆனால் கத்தி முனையில் சிக்கிய நாங்கள் பெரிய சத்தம் போடமுடியவில்லை. அந்த உருவம் இளவரசியைத் தூக்கிச்சென்றது" என்றனர் மெல்லிய குரலில்.

உருவத்தின் சாயல் யாரைப் போன்றிருந்தது என்று வினவினான் இளவரசன்.

தோழியர் மீண்டும் தலையைச் சாய்த்தனர். சொல்லுங்கள்! என்றான் எட்வின்.

உல்சியை ஒத்திருந்தது என்றாள் அச்சம் நிரம்பிய குரலில்.

"என்ன சொன்னாய்! என் உயிர் நண்பன்மீதா அந்தப் பழியைப் போடுகிறாய்! அவன் மாசுமருவற்ற மாணிக்கம், காணக்கிடைக்காத வைரம்! ஒருக்காலும் அவன் அந்த இழி செயலைச் செய்திருக்கமாட்டான். அவன்மீது தீமையைக் கூறும் உன் நாவை அறுக்க வேண்டும்" என்று வாளை உருவினான் இளவரசன்.

பொறுங்கள் இளவரசே! தோழியரின் வார்த்தையை மெய்யென நம்பவேண்டாம். ஆனால் பொய்யென எண்ணுவதற்கு என்ன ஆதாரம்! உற்ற காலத்தில் உதவும் உங்கள் நண்பன் உல்சி இந்த நேரத்தில் எங்கே போனான். இளவரசியைக் காணவில்லை! அதே நேரத்தில் நீங்கள் போற்றும் உல்சியையும் காணவில்லை!

இல்லை, இதில் ஏதோ சூது நிகழ்ந்திருக்க வேண்டும். அப்பா! இதை நீங்கள் நம்புகிறீர்களா? என் அருமை நண்பன் இந்த அடாத செயலைச் செய்திருப்பான் என எண்ணுகிறீர்களா? என்று கதறினான் இளவரசன்.

நம்பாமலிருக்கலாம். ஆனால் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் உல்சியைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகிறது என்றார், ஒழுக்கத்தைப் போதிப்பதாகக் கூறும் போப்.

நம்பியவர்களை நட்டாற்றில் கைவிடும் அந்தத் துரோகியை எங்கு இருந்தாலும் இழுத்து வாருங்கள் என்று ஆணையிட்டான் மன்னன் ஹென்றி.

உலகமறியா உல்சியை உண்மையானவன் என்று நீங்கள் நம்பிய தன் பலன் அவமானம்-அதுவும் தாங்கமுடியாத அவமானம். திருமணத்திற்குப் போப்பெருமான் குறித்தபடி இன்னும் ஒரு மணி நேரமே உள்ளது. மக்கள் மாதா கோவிலை நோக்கிச் சாரை சாரையாகச் சென்றுகொண்டிருக்கின்றனர். மணமகளைக் காணவில்லை—இளவரசனின் உற்ற நண்பன் உயிர் நண்பன் என்று போற்றப்படும் உல்சியையும் காணவில்லை என்றுமக்களிடம்எப்படிச்சொல்லுவது? என்றான் எட்வின்.

அமைச்சரே! வார்த்தையை அளந்து பேசுங்கள். உல்சியே 'காதரினை' அழைத்துச் சென்றான் என்பதற்கோ, செல்லவில்லை என்பதற்கோ சான்றேதுமில்லை. ஏதுவில்லாமல்பேசுவது பொறுப்பாகாது என்றான் இளவரசன்.

இவ்வாறு உரையாடிக் கொண்டிருக்கும்போது குதிரையின் மீது ஆடவன் ஒருவன் வந்து கொண்டிருந்தான். அவன் குதிரை மின்னல் வேகத்தில் அரண்மனையை நோக்கி வந்தது. வருவது உல்சியாகத்தான் இருக்க வேண்டுமென்பது இளவரசனின் எண்ணம். ஆனால் நெருங்க நெருங்க உல்சியுமல்ல, தான் இதுவரை கண்ட ஆடவனுமல்ல...... சுமார் பதினெட்டு வயது கூட மதிப்பிட முடியாத வாலிபன் குதிரையை விட்டு இறங்கி மன்னனை வணங்குகின்றான். அரசே! இளவரசி காதரினைக் கயவர்கள் சிலர் கடத்திச் சென்றார்கள் அல்லவா? அவர்களிடம் இருந்து காதரினை மீட்கும் பொருட்டு உல்சி போராடிக் கொண்டிருக்கிறார், உடனே புறப்பட வேண்டும்; இல்லையேல் உல்சியை உயிருடன் காண முடியாத நிலை ஏற்பட்டாலும் ஏற்படலாம்!

"இதோ இப்பொழுதே புறப்படுகிறேன். இளவரசிக்கு ஆபத்தொன்றுமில்லையா என்றான் இளவரசன்.

அவர்களுக்கு ஒன்றுமில்லை; இப்போது இங்கேயே சுகமாக இருக்கிறார்; நண்பரைக் காக்கப் புறப்படுங்கள் என்றான் புன்னகை கொண்ட வாலிபன்.

புறப்படுகிறேன் இதைச் சொல்லவந்த நீயார்!......

வாலிபன் பேசவில்லை......

யார் நீ என்றபடியே அவன் தலைப்பாகையைத் தட்டினான்; என்னவியப்பு! குதிரைமீது வந்த வாலிபன் வேறு யாருமல்ல. ஸ்பெயின் நாட்டு இளவரசி, இங்கிலாந்து நாட்டின் வருங்காலப் பட்டத்தரசி! இன்றைய மணமகள்காதரின் தான். கண்டவர்எல்லோர் முகமும் மலர்ந்தது; ஆனால் அமைச்சன் எட்வின் முகம் மலரவில்லை. இதைஇளவரசன் கடைக்கண்ணால் நோக்கிக்கொண்டே குதிரைமீது ஏறினான்...உல்சியை அழைத்து வந்த பிறகே காதரினுக்கு மணமாலை சூடுவேன் என்று சொல்லிக்கொண்டே புறப்பட்டான்!

எட்வின் முகத்தில் ஏமாற்றமும் அச்சமும் வளர்ந்துகொண்டிருந்தது. இளவரசியைக் கடத்திச் சென்றவர்கள் அமைச்சன் எட்வினின் ஆட்களே என்பது பலருக்குத் தெரியாது.

*

துன்பம் வந்து உள்ளத்திலே புகைந்துகொண்டு நிற்கும்போது, தன்னம்பிக்கைதான் நம்மைக் காப்பாற்ற முடியும். வேதனையை மறந்து, வெற்றியை நோக்கி முன்னேற தன்னம்பிக்கை அவசியம் வேண்டும்.

*

மனிதப் பண்பை மறந்தவன், அரசனுமல்ல, மனிதனுமல்ல.

சிறுகதை

# நளாயினி

கரந்தை—கணேசன்

"தேவிகா...! தேவிகா...!"

"யாரம்மா அது?"

"நான்தான் நளாயினி, உள்ளே வரலாமா?"

தேவிகாஎழுந்து ஓடோடிவந்து, "என்னம்மா இது; இப்படிக் கேட்டுவிட்டீர்கள்? தங்களின் பாத தூளிபட இக்குடில் என்ன தவம் செய்ததோ" என்றாள்.

"தவம் என்னடி வேண்டிக்கிடக்கிறது" என்றாள் நளாயினி தோழியிடம் அலுப்பாக.

தோழி தேவிகாவுக்கு ஒரே ஆச்சரியம், நளாயினியின் வருகை அவளால் என்றுமே எதிர்பார்க்க முடியாதது. எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடைபெறும் பொழுதுதானே மனிதனுடைய எண்ணங்கள் எங்கெங்கெல்லாமோ பறந்து செல்கின்றன. தேவிகாவும் அந்த நிலையைத்தான் அடைந்துவிட்டாள்.

நளாயினி, மவுக்கல்லியரிஷியின் பத்தினி. கொண்ட கணவனைக் கூடையில் வைத்து ஊரறிய உலகறியத் தாசி வீடு தூக்கிச்சென்று கணவனின் கட்டளையை நிறைவேற்றியவள். இன்று அவளை, உலகம் பூஜிக்கிறது, கற்புக்கரசி என்கிறது, கணவனே தெய்வம், அவன் கட்டளையே தன் இஷ்டம் எனக்கொண்டு அவன் வழிநின்ற குலமாது என்கிறது. அவள்—அப்படிப்பட்டவள்—தன் குடிசை நோக்கி வந்திருக்கிறாள் என்றால், தேவிகாவின் உள்ளம் ஆச்சரிய அலைகளால் தாக்கப்பட்டதில் வியப்படைவதற்கில்லை.

தேவிகா—நளாயினி, இருவருக்கும் உள்ள ஒரே உறவு ஏதோ தோழிகள் என்பதுதான். தேவிகா, சாதாரணமானவள். நளாயினி, உலகத்தாரின் தொழுகைக்கு உரியவள்!

உள்ளே வந்த நளாயினியை, 'சற்று நில்லுங்கள் அம்மா' என்றாள். நளாயினிக்குஒன்றுமே புரியவில்லை இருந்தாலும் சமாளித்துக் கொண்டவளாய், "உள்ளே உன் கணவர்"......என்றாள்.

"இல்லையம்மா..." என்றபடியே உள்ளே சென்றுவிட்டாள் தேவிகா.

நளாயினி என்ன காரணம் என்பதை எண்ணி முடிப்பதற்குள் தேவிகா செம்பில் நீரும், தட்டில் மலரும் கொண்டுவந்தவளாய் அங்கே காட்சியளித்தாள். சற்று நேரத்திற்குள் நளாயினிக்கு நிலைமைபுரிந்துவிட்டது. தன்னைப் பூஜைக்குரிய தெய்வமாகக்கருதி விட்டாள் என்பதை உணர்ந்தவுடனேயே நளாயினிக்கு வந்த கோபம் கொஞ்ச நஞ்சமல்ல.

"சே... நீயுமா இப்படி? முதலில் அவைகளைக் கொண்டுபோய் குப்பையில் கொட்டிவிட்டுவா" என்றாள் நளாயினி. அவளுடைய சொல்லிலே இருந்த கடுமையும், கண்களிலே எழுந்த கனலும் தேவிகாவை நிலைகுலையச் செய்துவிட்டன. தேவிகாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அழகான அம்மானைக்காய், எடுத்து விளையாடலாம் என்று எடுக்கப்போய் அது திடீரென்று வெடித்துச் சிதறினால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது தேவிகாவுக்கு. அப்படியே ஆடாமல் அசையாமல் நின்றுவிட்டாள்.

"ம்......ஓடு...முதலில் கொட்டிவிட்டு வா" என்றாள் நளாயினி. மறுபடியும் தன்னுடைய தெய்வத்தின் கட்டளையை பக்தனால் மறுக்கக்கூடுமா? பேசாமல் திரும்பிச் சென்று கொட்டிவிட்டு வந்தாள். குப்பையிலே கொட்டப்பட்ட அந்தப்புத்தம்புது மலர்கள் சற்று முன்பு செடி, கொடிகளிலே குதூகலமாகக் கூத்தாடிக்கொண்டிருந்தன. பலம் பொருந்திய மனிதர்களின் விருப்பு வெறுப்புகளும் இப்படித்தான் பலரைக் குப்பைக்கும் கோபுரத்திற்கும் நடத்திச் சென்று விடுகின்றன என்பதை அந்த மலர்கள் உணர்ந்தனவோ என்னவோ, ஆனால் அவைகள் மட்டும் அந்தக் கருத்துக்குச் சாட்சியாகிக்கிடந்தன.

"என்ன, கொட்டிவிட்டாயா?" திரும்பிவந்த தேவிகாவைக் கேட்டாள் நளாயினி. குப்பையில் கொட்டாமல் உள்ளே வைத்துவிட்டு வந்துவிட்டாளோ என்னவோ என்ற சந்தேகம் போலும் நளாயினிக்கு.

"தங்கள் கட்டளைப்படியே செய்துவிட்டேன்" என்றாள் தேவிகா.

தேவிகாவுக்கு முன்பெல்லாம் நளாயினி பூஜைக்கு உரியபொருளாகக் காணப்பட்டாள். கண நேரத்திற்குள் அந்த நிலைமாறிப் பிரச்னைக்குரிய புரியாப் பொருளாகி விட்டாள். தேவிகாவுக்கு நளாயினியிடம் என்ன கேட்பது, என்ன பேசுவது என்பதே புரியவில்லை. நின்றுகொண்டிருந்த தேவிகாவை நளாயினி தன் அருகே அமரச்செய்து பேசத் தொடங்கினாள்.

"உலகம்தான் என்னைப் பூஜிக்கிறதே, நீயுமா அதே வேலையைச் செய்யவேண்டும். உன்னிடம் நான் அதை எதிர்பார்த்திருந்தால் உன் குடிசைநோக்கி நான்வந்திருக்கவே மாட்டேன், உன்னை என் குடிலை நோக்கி வரச்செய்திருப்பேன். தேவிகா நீ என் தோழி. நான் உன்னிடம் எதிர்பார்ப்பது தோழமையைத்தானே தவிர, வேறல்ல. நானும் உன்னைப் போன்றசாதாரணநிலையிலுள்ள

பெண் என்று கருது. அதுதான் நான் வேண்டுவது. உனக்கு நான் பேசுவது ஆச்சரியமாக இருக்கும். நான் இனிப் பேசப்போவது இன்னும் ஆச்சரியமாக இருக்கும். மனிதனுடைய உருவத்தைப் போன்றேதான் அவன் மனமும் இருக்கிறது. வெளிப்புற உருவம் எவ்வளவு அழகாக இருக்கிறதோ அதற்கு நேர் எதிர்மாறாக உள்ளுருவம் இருக்கக்காண்கிறோம். உள்ளே குடலும், கும்பியுமாக... ஒரு கோரம். மனமும் அப்படித்தான். வெளி உலகுக்கு ஏற்ப அதன் செயல்களை அமைத்துக் கொண்டு அழகு பெறுகிறது. அதன் உள்ளேயோ...... அதன் அடித்தளத்திலே குமைந்து கிடக்கிற ஓராயிரம் எண்ணங்கள்...... உண்மை நிலையை உலகு அறிய முடிவதில்லை. அறிய முடிந்தால் உலகம் என்னை இவ்வளவு போற்றுமா?" என்றாள்.

இதுவரையிலும் எப்படியோ கேட்டுக்கொண்டு வந்த தேவிகா தன்னையும் அறியாமல் "என்ன அம்மா சொல்கிறீர்கள்?" என்றாள். எவ்வளவோ தேக்கியும் தேக்க முடியாமல் அணையை உடைத்து வரும் வெள்ளம்போல் வந்தது அந்தச் சொல். தன் அன்புக்குப் பாத்திரமான ஒரு பொருள் தன் முன்னாலேயே அழிவதை யார்தான் பார்த்துக்கொண்டிருக்க முடியும்.

நளாயினியோ இவளுடைய கேள்வியைப்பற்றிக் கவலைப்படவில்லை. மெல்ல நகைத்தபடியே 'மேலும் கேள் சகோதரி' என்று தொடர்ந்தாள்.

"என்ன சொல்கிறாயடி?" என்று கேள் அதிலேதான் நான் ஆனந்தப்படுவேன். உயர்த்திப்பேசும் பேச்சுக்களால் என மனம் திருப்தி பெறாது. வேண்டுமானால் உன் மனதிலே என்னைப்பற்றிய நிலை என்ன என்பதை மட்டும்தான் அதனால் காட்டமுடியும்."

"அம்மா........" தேவிகாவால் மேலும் பேச முடியவில்லை. தொண்டையின் இடையிலே ஏதோ ஒரு பொருள் உள்ளேயும் செல்லாமல் வெளியேயும் வராமல் சிக்கிக்கொண்டதைப் போன்று ஆகிவிட்டது. மூச்சுக் குழலை யாரோ பிடித்து அமுக்கிக்கொண்டிருப்பது போன்று பட்டது அவளுக்கு. பேச்சு மூச்சற்ற முறையில் அப்படியே அமர்ந்துவிட்டாள்.

"தேவிகா...... உனக்குத் தெரியாது, நான் எப்படி வயதோடிய முனிவருக்கு வாழ்க்கைப்பட்டேன் என்பது. பதித்தொண்டுக்குப் பக்குவம் அடைய எண்ணித்தான் இவருக்கு வாழ்க்கைப்பட்டேன் என்று பலர் எண்ணுகிறார்கள். நீயும் அப்படித்தான் எண்ணி இருப்பாய்.

நான் மாமன்னன் மகள். தந்தை நளனிடம் பலநாட்டு மன்னவர்களும் பயந்துகிடந்த காலம் அது. காதுக்கெட்டிய தூரம்வரை என் தந்தையே பேரரசன் என்பதால் நான் தோண்டி எடுக்கப்படாத தங்கம்போன்று அந்தப்புரத்திலேயே அடைபட்டுக் கிடந்தேன்.

இந்த நிலையில்தான் என்னைப் பற்றி அறிந்திருந்த மவுக்கல்லிய முனிவர் என் சூழ்நிலையைச் சாதகமாக்கி என் தந்தையிடம் என்னைக் கேட்டிருக்கிறார். தந்தையோ முனிவரின் முனிவுக்கு அஞ்சி மறுத்துக்கூற முடியாத நிலையில், மகளின் மனம்போல என்று கூறி இருக்கிறார். என் அனுமதி பெறுவதாகத் தந்தையிடம் கூறி என்னிடம் எழில் மிகுந்த வாலிபன் ஒருவனை அனுப்பி என் அனுமதியும் பெற்றுவிட்டார். நானோ அந்த வாலிபனுக்கு வாழ்க்கைப்படுவதாகத்தான் கூறினேன். என் கணையாழியையும் பெற்றுச் சென்றான் அடையாளமாக. அந்தவாலிபனோ இந்த முனிவருக்காக அவராகி வந்திருக்கிறான். இந்தச் சூது தெரியாத நான் என் தந்தை கேட்டபோழுதுகூட, 'ஆம், அவரைத்தான் திருமணம் செய்து கொள்வேன்' என்று கூறினேன். பின்னர், என் மணம் நடைபெற்றது. இல்லை... இல்லை...... என் இன்பம்... என் இளமை...... என் எழில்...... யாவும் தூக்கிலிடப்பட்டன. நான் தியாகி ஆக்கப்பட்டேன். சமுதாயச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவள் ஆனேன். சமுதாயச் சட்டமோ ஆண்களுக்கு வளையவும், நெளியவும் கூடிய இரப்பர்க்கோலாகவும், நமக்கெல்லாம் நிலையான இரும்புக்கோலாகவும் இருக்கிறது. இந்நிலை இருக்கும் வரை நம்போன்றாரின் நிலை இப்படித்தான் இருக்கும். இதற்குக் காரணம் ஆண்களே நமக்கும் சேர்த்துச் சட்டம் அமைப்பதுதான்.

என் கணவரோ, தேடக் கிடைக்காத தனம் கிடைத்தால் லோபி எப்படி ஆனந்தமும், அவதியும் படுவானோ அப்படிப்படுவார். அதைப் பார்க்கும் பொழுதே எனக்குச் சிரிப்பு வரும். எண்ணற்ற போராட்டங்கள் அவர் உள்ளத்திலே எழும். அதன் பிரதிபலிப்பை நான் அனுதினமும் அவரிடம் காண்பேன்.

'நீ புதையல், வேறு யாருக்குக் கிடைத்தது இப்படி' என்று பூரிப்பார். பூரிப்பின் இடையிலேயே, 'இந்தப் புதையலை நம்மால் காப்பாற்ற முடியுமா கொள்ளை போகாமல்' என்கிற கேள்விக் குறியும் எழும். எழுகின்ற கேள்விக் கணைகளுக்குப் பதில்சொல்லமுடியாமல் அவர் சோர்ந்து கிடக்கும நேரங்களில் என் மனம் பச்சாதாபப் படுவதுண்டு. பரிதாபத்திற்குரிய அந்த மனிதரை நான் பதியாகக் கொள்ள முடியாவிட்டாலும், பதியாகக் கருதி நடந்து கொள்வதென்று இந் நிகழ்ச்சிகளினால் முடிவு செய்துவிட்டேன்.

நான் இயந்திரமானேன். அவர் அதை இயக்குபவரானார். இப்படியே காலம் சில கடந்தது. இப்பொழுதோ மவுக்கல்லியர் மனதிலே மாற்றமில்லாவிட்டாலும் உடலிலே மாற்றம், முடைநாற்றம், தொழுநோய். இளமைப் பருவக் குறும்புகளின் விளைவு என்கிறார்கள் உண்மைநிலை உணர்ந்தவர்கள். எதாக இருந்தாலும், இந்த நிலைக்குப் பிறகும்... தேவிகா...... நளாயினியின் கண்களிலே கண்ணீர் பெருக்கெடுத்து ஓட ஆரம்


## "காதலெனும் தீவினிலே.......!"

தோழர் இரா. மதனகோபால் பி-காம்; அவர்களால் தீட்டப்பெற்ற மேற்படி நாடகம் பெங்களூர் குப்பி தியேட்டரில் தோழர் எஸ். வி. பதி அவர்கள் தலைமையிலும் தோழர் மு. கருணாநிதி எம். எல். ஏ. அவர்கள் முன்னிலையிலும் 26—7—58-ல் நடைபெறும்.

கட்டணம்: ரூபா 3, 2, 1, 0-8-0

பித்துவிட்டது. தேவிகாவுக்கோ, தன் முன்னாலேயே தன் தெய்வம் அழுவது...... கலைஞன் ஒருவன் உருவாக்கிய உயிர்ச் சித்திரம் அவன் முன்பே அழிக்கப்படுவது போன்று ஆயிற்று. அப்படியே நளாயினியைக் கட்டிப் பிடித்து, 'ஐயோ... அக்கா... நீ தெய்வமில்லை...நீ என் சகோதரி தான்' என்று கத்திவிடவேண்டும் போலிருந்தது. ஆனால், கண்ணீர்த் திவலைகளின மூலம்தான் அவைகளைப் பிரதிபலிக்க முடிந்தது.

தேவிகாவின் கண்ணீரைப் பார்த்தவுடன் நளாயினிக்குப் புதிய தெம்பு ஏற்பட்டது.

'கேளடி தங்கையே' எவ்வளவு தான் மனதை இரும்பாக்கிக் கொண்டாலும் உணர்ச்சி என்னும் உலைக்கு முன்னால் மனம் உருகத்தான் செய்கிறது என்பதை அப்பொழுதுதான் உணர்ந்தேன். என் மனமும் புரட்சி செய்ய ஆரம்பித்தது. இளமை தூங்காத வன்மை பெற்ற வயோதிக முனிவருக்கோ என்னைத் தொந்தரவு செய்வதே வேலையாகவும் போய்விட்டது. என்னால் பொறுக்க முடியாத நிலையில் ஒரு நாள் கேட்டேவிட்டேன், 'ஏன் என்னைத் தொல்லைப் படுத்துகிறீர்கள். எந்தத் தாசி வீடாவது சென்று வருவதுதானே. வேண்டுமானால் நானேயாவது யாராவது ஒருதாசியிடம் கேட்டு வருகிறேன். வேறு வகையில் நான் ஆளல்ல' என்ற முறையில்.

அப்புறமாவது விட்டாரா முனிவர். நான் சொன்னதுதான் சாக்கென்று கொண்டு, 'உன்னால் முடியாவிட்டால் அதையாவது செய்; இல்லாவிட்டால்நீஉடன்படு' என்கிற முறையில் பேச ஆரம்பித்துவிட்டார். அதன் விளைவு தான் தேவிகா நான் தாசி வீட்டிற்குக்கூடை தூக்கிச் சென்றதும், கணவன் சொல் தட்டாத கற்புக்கரசி என்ற பட்டம் பெற்றதும். ஆண்கள் எப்பொழுதுமே வல்லவர்கள்; யானையைக் கொண்டே யானையைப் பிடிக்கும் பாகன் கலையை அவர்கள் எப்போதோ கற்றுவிட்டார்கள்,

நீ நினைக்கலாம், எந்தப் பெண்ணும் தன் கணவன் பிற பெண்களை பார்க்கக் கூடச் சகிக்க மாட்டார்கள், நானே பிறனொருவள் இல்லத்திற்கே என் கணவனை அழைத்துச் சென்று அவர் விரும்பியதை அடையச் செய்தேன். இந்நிலையில் நான் வேறு என்ன செய்வது? சொல்...... தேவிகா......சொல்......' என்றவாறே நளாயினி தேவிகாவின் தோள்களைப் பிடித்து உலுக்கினாள்

'ஐயோ......அக்கா.........என் தலை சுற்றுகிறது. நீ மிகவும் பரிதாபத்திற்கு உரியவள்' என்று உரக்கக் கத்தியே விட்டாள் தேவிகா.

* * *

திடீரென்று எழுந்து உட்கார்ந்தாள் நளாயினி. எதிரே தேவிகா இல்லை. அவள் தேவிகாவின் குடிலிலும் இல்லை. தன் குடிசையில்தான் இருந்தாள். தன் வாழ்க்கையில் பல காலமாகக் குமைந்து கிடக்கும் இந்த உண்மையைத் தன் தோழி தேவிகாவிடமாவது கூறி விடவேண்டுமென்ற ஆவல் பல காலம் எழுந்ததுண்டு. ஆனால் கற்சிலையைக் கடவுளாக எண்ணி மலர் தூவிக் கொண்டிருக்கும் பக்தன் முன், கல், "நான் கடவுள் அல்ல, கல்தான்" என்று கூறினால் பக்தன் என்ன நிலை அடைவானோ, அதே நிலையை இவளும் அடைந்து விடுவாள். தன்னை அருவருப்பாகக் கூடப் பார்க்கத் தொடங்கிவிடுவாள் என்ற அச்சம் தான் ஆவலை அடக்கி வைத்தது. அந்த ஆவலின் கட்டுமீறிய செயல் தான் இந்தக் கனவு என்பதை உணர்ந்தவுடன்; வாய்விட்டு 'நல்ல வேளை' என்றாள்.

அப்போது, "தண்ணீர்...... நளா...... தண்ணீர்......" என்ற குரல் கேட்டது. குரல் வந்த திசையை நோக்கினாள். மவுக் கல்விய முனிவர் ஓலைப்பாய் ஒன்றில் முடை நாற்றம் வீச முனகிக் கொண்டிருந்தார். நளாயினி எழுந்து சென்று. தண்ணீர் எடுத்துக்கொண்டு ஊரறிய உலகறிய பதிசேவை செய்யப் புறப்பட்டு வந்தாள்.


# தூத்துக்குடி தேர்தல்

## இருப்பது கொஞ்சநாட்களே!

### தோழர்காள்!
### கழகங்காள்!!

கையில் கிடைத்ததை ஒவ்வொருவரும் உடன் அனுப்பியுதவுங்கள், அறிவகத்துக்கு.

அவசரப்பணி! காசுகள் தேவை!!

# "மலடி!"

—[வி. ஆர். துரை]—

**அவர்கள்**—பெண்தேடி அலைந்தார்கள். சீக்கிரத்தில் ஒரு நல்ல பெண்ணைப் பார்த்து, தன் மகன் தலையில் கட்டிப்போட்டுவிட வேண்டும் என்று, அந்தத்தாயும் தந்தையும் அவசரப்பட்டார்கள்.

பெற்றவர்கள், இன்னும் சில வாண்டு கழித்துத்தான் மகனின் திருமணத்தைக் கோலாகலமாக நடாத்தவேண்டும் என்று இருந்தார்கள். அந்த முடிவிற்கு ஒரு குழுக்குப்போட்டுவிட்டு, இப்படித் திடீர் என்று பெண்தேடும் படலத்தில், அந்த 'அழகு' மகனை ஈன்றெடுத்தவர்கள் இறங்கியதற்கு ஏதாவது ஒரு காரணம் இல்லாமலா போகும்?

தாய்க்கும் தந்தைக்கும் பயந்து, அடக்க ஒடுக்கமாகத்தான் மகன் இருந்து வந்தான். தாயிடம் தவறாக ஒரு வார்த்தை பேசமாட்டான். தந்தை வந்தால் உட்கார்ந்த இடத்தைவிட்டு எழுந்து நிற்பான். அப்படி அவன் இருந்ததெல்லாம் பழையகாலம். இப்போது அவன் ஒரு 'மாதிரி' ஆகிவிட்டான்.

வேறு எதைப் பற்றிப் பேசினாலும், அவ்வளவாக அதைச் செவியில் போட்டுக்கொள்ளமாட்டான். ஒரு பெண்ணைப் பற்றிய பேச்சென்றால், வெல்லம் அவனுக்கு. மணிக்கணக்கிலே சலிக்காமல் மங்கையர்தம் மதிமுகத்தைப் பற்றியும், அவர்தம் இயல்பு பற்றியும்பேசிக்கொண்டிருப்பான், அரிவையர் விஷயத்தில் அதிகமாக அக்கரை எடுத்துக்கொண்டான்.

மகன் பச்சையாகவே நடந்துகொள்ளுகின்றான். அவன் வெற்றிகரமாக நடத்துகின்ற பெண்விளையாட்டுகள் கண்ணாடிபோல் தெரிகின்றது. தெரிந்தும்கண்டிக்காமல் கண்டும் காணாதவர்போல் தந்தை நடந்துகொண்டார். மகனைக் கண்டித்து, அவன் திருவிளையாடலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப் பெற்றவர்கள் தயங்கினார்கள். ஏதேனும் மனம் நோகச் சொல்லிவிட்டால், செல்லமாக வளர்த்த ஒரே ஆசை மகன், 'யாதும் ஊரே' என்று எங்காவது போய்விடுவான்; தண்டவாளத்தின்மேல் தலைவைத்துப் படுத்துக்கொள்வான்; கொடிய நஞ்சை கொம்புத்தேனாகக் கருதிக் குடித்துவிடுவான்; ஆசையோடு மின்சாரக் கம்பியை பிடித்துக்கொள்வான்; மரத்தில் ஏறி ஒரு முழக் கயிற்றில், உடலைத் தொங்கபோட்டுக்கொள்வான் என்று அவர்கள் மிகவும் பயந்தார்கள்.

அவனுக்கு வயது இருபது. பெயர், மணவாளன். ஒரே மகன். ஏராளமான சொத்துவேறு இருக்கிறது. இந்த எண்ணமே, பெற்றோர்களை எதையும் செய்யவிடாமல் தடுத்து நிறுத்தியது.

"இப்படியே விட்டுக்கொண்டு போனால், பையன் நிச்சயமாகக் கெட்டொழிந்து போவான். காலணுவுக்கு உதவமாட்டான், எதிர்காலம் அவனைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கும். எங்காவது 'ஒன்றை'ப் பார்த்து, அவனுக்கு முடித்துவிடுங்கள். எல்லாம் சரியாகப் போய்விடும்." சில பெரிய மனிதர்கள், இப்படியோசனை வழங்கினார்கள். பெற்றோர்களின் புத்திக்கும் அது சரியென்றே பட்டது. அப்போது அதைத் தவிர வேறு ஒரு வழி இருப்பதாக, அவர்கட்குப் புலப்படவில்லை. ஒரு செல்வந்தரின் வீட்டில், நினைத்ததைச் செய்து முடிக்க என்ன தடை இருக்கப் போகின்றது?

எங்கெங்கோ வலைபோட்டுத் தேடினார்கள். பாவையைத் தேடிப் பல ஊர்களிலும் சுற்றி அலைந்தாகிவிட்டது. சரியான பெண்ணொருத்தி அவர்கட்கு கிடைக்காமலேயே இருந்தது, பெருங்கவலையை உண்டாக்கிவிட்டது. தென்கடல் முத்தை பல்லாகவும், கீழ்க்கடல் பவளத்தை வாயாகவும், நிறைமதி முகமும், மானைப் பழிக்கும் விழிகளும், மணிக்கொடி இடையும், கிளிப் பேச்சும் பொன மேனியும் கொண்ட ஒரு பொற்சிலையைத் தேடி அவர்கள் அலையவில்லை. பெண்ணிற் குரிய இலட்சணங்கள் பலவும் அமையப் பெற்று மகனுக்குப்பொருத்தமாக இருக்கும் மங்கை நல்லாள் ஒருத்தியைக் கஷ்டப்பட்டு அவர்கள் தேடினார்கள்.

இனியான 'மங்கை ஒருத்தி, அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு மேலாகவே இருந்ததை, ஒரு கிராமத்தில் பார்த்தார்கள். செடியில் பூத்திருக்கும் ரோஜா போன்றிருந்த அந்தப் பாவை அவர்கட்கு மிகவும் பிடித்துவிட்டது. அந்தக் கோதைக்கு பூஞ்சோலை என்று பெயர் சூட்டியிருந்தார்கள். பெண்ணை ஈன்றவர்களின் சம்மதத்தைப் பெற்றுக் கொண்டு, பெண்தேடிச் சென்றவர்கள் புன்னகையுடன் வீடு திரும்பினார்கள்.

இது என்ன அந்தக் காலமா? மனைவியாக வரப்போகின்றவளை, மகன் சென்று பார்த்தான். அவன் திரும்பிவந்து திருமணத்திற்குத் தடையேதும் சொல்லவில்லை. "பூஞ்சோலை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது" என்று திருவாய் மலர்ந்தான். அது போழ்து ஈன்றவர்கள் பெரிதும் மகிழ்ந்தார்கள்.

ஒரு சீமான் மகனின் திருமணம் எத்துணை ஆடம்பரமாக நடைபெறுமோ, அந்த ஆடம்பரத்தில் இம்மியும் குறைவின்றி 'மணவாளன்—பூஞ்சோலை' மணவிழா நடந்தேறி முடிந்தது.

அவனும் அவளும் இன்பத்தின் உச்சாணிக் கிளையிலேபோய் நின்றார்கள். கைபடாத ரோஜா அவள். கசப்புத்தட்டக் கொஞ்ச நாட்கள் ஆகும் அல்லவா? கொள்ளை கொள்ளையாக இன்பத்தை அனுபவித்தார்கள்.

ஈடு இணை சொல்ல முடியாத இந்தப் பேரின்பம், அவளுக்குச் சொந்தமாக இருந்ததெல்லாம் மூன்றே ஆண்டுகள் தான். அதற்கு மேல் அப்படி என்ன நடந்துவிட்டது? அவள் கனவில் கூட எதிர்பார்க்காத ஒரு பயங்கரத் திருப்பம், அவளின் வாழ்க்கைப் பாதையில் நடந்துமுடிந்து விட்டது.

"கிட்டத்தட்ட நான்கு வருடங்களை முடியப் போகின்றன. கடல் போன்ற வீட்டில் 'குவா-குவா' என்று கத்துவதற்கு ஒரு குழந்தை இல்லை. இதுவரையில் எவ்வளவோ வைத்தியம் செய்து

பார்த்தாகிவிட்டது. போகாத கோயிலும் இல்லை. பணச்செல வைத்தான் நாம் கண்டது. பலன் என்னவோ பூச்சியம்தான். மல டிக்குப்போய் என்ன செய்தாலும் பலன் கிடைக்குமா? கடலில் கரைத்த பெருங்காயம்தான். என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லை?" மணவாளனின் தந்தை பேசி முடித்தார்.

"நேற்றுக்கூட வீடு தேடி ஒரு சாத்திரக்காரன் வந்தான். இனி யும் குழந்தை ஒன்று பிறக்கும் என்று எதிர் பார்ப்பது, முட் டாள்தனம் என்றான். இதில் போய் அபாரமாகயோசனை செய்ய வேண்டியது என்ன இருக்கிறது? வேறொரு பெண்ணைப் பார்த்து, மகனுக்கு முடிக்கவேண்டியது தான்" மணவாளனின் தாய் பிரச் சனைக்கு ஒரு முடிவுகட்டினாள்.

ஏதோ வேலையாக, அந்த அறையின் பக்கமாக வந்த பூஞ் சோலை, மாமனாரும் மாமியாரும் பேசிக்கொண்டிருந்ததைக் கேட் டுத் திடுக்கிட்டுப்போனாள். காய்ச் சிய ஈயத்தை அவள் செவியில் ஊற்றுவதுபோல் இருந்தது. அவள் வேதனையால் துடிதுடித் தாள்; துவண்டாள்; தூக்கம் இன்றி வருந்தினாள். கட்டுக்குலை யாத அவள் உடல் எலும்பாகி யது. கண்ணைப் பறிக்கும் அவள் பொன்மேனி எங்கோ ஓடி ஒளிந்துகொண்டது. மாமியாரின் சொல்லம்புகள் அவளது மென்மையான இதயத்தை, முள் போல் தைத்தது. அதைக்கூட அவள் பொறுத்துக்கொண்டாள்.

தான் இன்பசுகம் கண்ட இடத் திற்கு, மற்றொருத்தி வரப் போகின்றாள். அவர்கள் நடத்து கின்ற இன்பக்கேளிக்கையை இவள் பார்த்துக்கொண்டு பேசாமல் தனி அறையில் குந்தி இருக்க வேண்டும். அவள் என்ன மரக் கட்டையா? இந்தத் துன்பத்தை அவளால் எப்படிச் சகித்துக் கொண்டு இருக்கமுடியும்? கண வரின் காலைக் கெட்டியாகப் பிடித் துக்கொண்டு, கோவென்று அழு தாள். இந்த அபலையின் கூக்குர லுக்கு அவன் எங்கே செவி கொடுத்துக் கருணை காட்டப் போகின்றான்? வாடிப்போய்விட்ட இந்த மலர் இனிமேல் அவ னுக்கு எற்றுக்கு? புத்தம் புது மலரின் வரவை, ஆவலுடன் அவன் எதிர்பார்த்துக்கொண்டு

இருந்தான். அவனுக்கும் 'இதயம்' இருக்கின்றது!

ஒரு நாள், பூஞ்சோலை ஓடிவிட் டாள். இல்லை, தாய்வீட்டிற்கு பலாத்காரமாகத் துரத்தப்பட்டு விட்டாள். அவளுக்குத் 'தாலி' கழட்டப்பட்டது. மனைவியிருக்க, மற்றொரு பெண்ணைக் கொடுக்க பலரும் தயங்கியதே அதற்குக் காரணமாகும். பெண் வீட்டாருக் காக அவர்கள் அஞ்சவில்லை. நினைத்ததை அநாவசியமாக செய்து முடித்துவிட்டார்கள். இரும்புப் பெட்டியில் கத்தை கத்தையாக பணம் தூங்கிக் கொண்டிருந்தது. 'பணமேதான் உயிர்நாடி, என்கிற இந்தக் காலத் தில், என்ன அக்கிரமம்செய்தாலும் தப்பித்துக்கொள்ளலாம் அல் லவா? இதை அவர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள்.

மணவாளனின் இரண்டாவது திருமண வைபவம் முடிந்துவிட் டது. முதல் மணவிழாபோல் அவ் வளவு ஆடம்பரம் இல்லை. ஆண்டு கள் இரண்டு மூன்று உருண்டு விட்டன. நிலைமை என்னவோ 'மாமூலாகவே' இருந்தது. மண வாளனின் தாயும் தந்தையும் வேதனையில் நீந்தினார்கள். திரும் பவும் அவர்கட்கு பழைய எண் ணம் தலைதூக்கியது. இரண்டா வது முறையாகக் கட்டிக்கொண்டு வந்த பரிமளாவையும், அவர்கள் படுகுழியில் தள்ளப்பார்த் தார்கள்.

பழைய சட்டையைக் கழட்டி எறிந்துவிட்டு, புதுச்சட்டை மாட் டிக்கொள்வதைப்போல், பெண் மாற்றும் தொழிலில் ஈடுபட்டார் கள். பெற்றவர்கள்தான் அப்படி யென்றால், மகனாவது புத்திசாலி யாக இருக்கக் கூடாதா? ஒவ் வொரு கனியாகச் சுவைத்துக் கொண்டே போகலாம் என்ற தீய எண்ணத்தை, அவன் கொண் டிருந்தான்.

கதிரவன் இன்னும் ஒரு சில நிமிடங்களுக்குள், குணதிசையில் வந்திடுவான். பெண்மயிலைத் தேடிக் கிளம்ப, துரிதமாக அவர் கள் தயார் படுத்திக்கொண்டிருந் தார்கள். இது அவர்களின் மூன்றாவது பயணம். "இராகு காலம்' கழிந்து, அவர்கள் எதிர் பார்த்துக்கொண்டிருந்த "நல்ல நேரம்" வந்தது. புறப்படுகின்ற சமயத்தில், தபால்காரன் ஒரு கடி தம் கொடுத்துவிட்டுச் சென்றான்.

அன்புடையீர்!

வணக்கம். உங்கள் 'மாஜி' மருமகள்தான் கடிதம் எழுது கின்றேன். எதை நினைத்தும் ஆச்சரியப்படாதீர்கள். 'மலடி' என்று திருவாய் மலர்ந்தீர் கள். என் அப்போதைய மாமியாரும்; "சாத்திரம்கூடக் குழந்தை பிறக்காது" என்று சொல்லிவிட்டதுஎன்றார்கள். அதனால் நான் படுகுழியில் தள்ளப்பட்டேன். பாலைவன மாகியது என் வாழ்வு.

எனக்குப் புதுவாழ்வு அளிக்க ஒருவர் முன்வந்தார். சமுதாயத்தைத் திரும்பிப் பார்க்காத அவரின் அன்பு மனைவியானேன். புது இன்ப வெள்ளத்தை எனக்குத் தந் தார். இப்போது எனக்கொரு குழந்தை பிறந்திருக்கிறது. ஆண் குழந்தை. பெயர், 'இளங்கோவன்' என்று நானும் என் கணவரும் சேர்ந்து வைத்திருக்கின் றோம். சுகமாக இருக்கிறேன்.

உங்கட்கு என் இன்ப வாழ்வை அறிவிக்கவேண்டி, நான் கடிதம் எழுதவில்லை. எனக்குப் பின்னால் கட்டிக் கொண்டு வந்தவளையும் படு குழியில் தள்ளப் போவதாக அறிந்தேன். ஏனோ வீணாகப் பெண் மாற்றித் திரிகின்றீர் கள். முதலில் உங்கள் மகனை, ஒரு பெரிய டாக்டரிடம் அழைத்துக் கொண்டுபோய் காட்டுங்கள். குற்றம் அங்கே யும் இருக்கலாம். இப்படிக்கு

பூஞ்சோலை.

கடிதத்தைப் படித்து முடித்த போது, அவர்கள் சிலையாகிவிட் டார்கள். கொஞ்ச நேரம் கழிந் தது. "மலடி என்று துரத்திய வளுக்கு, மாணிக்கம் போன்ற ஒரு ஆண்குழந்தை பிறந்திருக்கிறது" பெரியவரின் வாய் முணுமுணுத் தது. பக்கத்தில் வாய் திறவாமல் மனைவி உட்கார்ந்திருந்தாள். தலை குனிந்த வண்ணம் மகன் நின்றி ருந்தான்.

இப்போதுஅவர்களுக்குப்பெண் தேடிக் கிளம்பும் உத்தேசமில்லை. அந்த எண்ணம் செத்துவிட்டது. இனித் தலையெடுக்காது.

மூலையில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்த பரிமளாவின் முகத்தில், முறுவல் தோன்றி மலர்ந்தது.

# அன்றோர், நாள்!

"கலிங்கம், என்ற பெயர் அப்போது உண்டாகவில்லை அந்த நிலப்பரப்புக்கு! அங்கே, ஆளவந்தான் கார்காந்து எனும் மன்னன்!! அவன் அங்கே ஆட்சிக்கு வந்ததைப்பற்றி, அரியதோர் கதையுண்டு. சின்னஞ்சிறு வயதில், பறையன் ஒருவனுக்குப் பாலகனாக வளர்ந்தவன் அவன்! சுடுகாட்டிலே, சுடலைகாக்க வந்தபோது, குழந்தையொன்று அழுவதைக் கண்டு அந்தப் பறையர் எடுத்துக் கொண்டுபோய் வளர்த்தாராம்!! வயதுவந்த அச்சிறுவன், தன்னையொத்தவர்களுடன் விளையாடும் போது, அவர்களுக்குள் வாக்குவாதம் வளர்ந்ததாம். சின்னஞ் சிறுவர்கள் பேசிக்கொள்வதுண்டல்லவா, எங்கப்பாவைப்போல் பெரிய அதிகாரியாக வருவேன்— போடா! நான் யானைமேலே ஏறித்தான் ஊருக்குப்போவேன்—ஏய்! நான் இந்த நாட்டுக்கே ராஜாவாக வருவேன்!—என்பதுபோல. அதுபோல, அவர்களும் பேசிக்கொண்டிருந்திருக்கிறார்கள்!! அப்போது, அங்கேயிருந்த நமது சிறுவன் "நான்! இந்த நாட்டுக்கே ராஜாவாக வந்து உங்களையெல்லாம் விடப் பெரியவனாக, பெரிய இடத்திலே உட்காரகந்திருப்பேன்" என்றானாம். சிறுவன், பறையர் குலமாயிற்றே! ஈசன் மகன்-ஆசையோ அலையம் ஆள. அதைக்கேட்டான், அங்கிருந்த வேதியர்குலச் சிறுவனொருவன். மனம் பொறுக்கவில்லை! "ஏழைப் பறையன்—நீ, ராஜாவாக, வரவா! டேய்......... கேளுங்கடா, இந்தப் பறையன் ராஜாவாக வரப்போறானாம், வெட்டியான் மகன், கட்டியாளப் போகிறானாம் நாட்டை!!" என்று ஏளனம் பேசினானாம். சிறுவனோ, "இல்லை! இல்லை!! நிச்சயம் நான், பெரியவனானதும் ராஜாவாகத்தான் ஆவேன். நீ, வேண்டுமானால் பாரேன்," என்றானாம். உடனே, அந்தச் சிறுவர்கள் சங்கத்தில் யார் ராஜாவாக வருவார்கள். பார்ப்பனப்பையனோ! பறையர்மகனோ! என்பதைத் தீர்மானிக்க ஒரு பந்தயம் வைத்தனர். அதன்படி, கொஞ்சத் தூரத்திலுள்ள மூங்கிற் புதரைக்காட்டி அங்கே ஓடி யார் முதலில் ஒரு மூங்கிற் குச்சியை ஒடித்துக்கொண்டு வருகிறார்களோ, அவர்கள் தான் ராஜாவாக வருவார்கள் — என்று பந்தயம் வைக்க, பறையனும் பார்ப்பனனும் ஓடினர். உழைத்துழைத்து உரமேறிய உடல் எங்கே! உண்டு கொழுத்த உருவம் எங்கே!! நமது சிறுவன், முதலில்போய் ஒடித்துவிட்டான். பார்ப்பனப் பையனுக்கோ, அவமானம் தாங்கமுடியவில்லை! அதிலும் ஒரு பறையன் அரசனாவதா!! — என்று கோபம் வேறு. அதனால் அவன், இவன் மீது பாய, இவன் அவன்மீது பாய, சச்சரவு ஆரம்பித்து அந்த ஊர் அரசனிடம் போயிற்று தகராறு. வழக்கைக் கேட்ட அரசனும் சிரித்தான்! சபையினரும் சிரித்தனர்!! என்ன சொல்வது? சிறுவர்கள் சண்டை! ஆனால் அவர்கள் வைத்த போட்டியின்படி, பறையன்தான் அரசபதவி பெறுவான்! ஆனால், அவனோ தீண்டாதவன்! அதுமட்டுமல்ல, புலாலும் புழுதியுமே சதமெனக் கிடந்ததால், உடம்பெல்லாம் சொறிவேறு! சிரங்கிலிருந்து வடியும் சீழ் நாற்றம் வேறு!! இவன், 'அரசன்' என்றால் ஏளனமும் கெக்கலிப்பும்தானே இருந்திருக்கும் அரசமன்றத்தில். அரசனும் சிரித்துக்கொண்டே, நகைச்சுவையாகச் சொன்னான், "ஏய்! சொறி சிரங்கா!! — (கார்காந்து என்றால் சொறிசிரங்கன் என்று பொருளாம்) நீ, ராஜாவாக வந்ததும், உன் தேசத்திலிருக்கிற கிராமத்தில் ஏதாவதொன்றை இந்தப் பிராமணனுக்கு கொடு. பிராமணா, போ!", என்று கேலியாகத் தீர்ப்பளித்து அனுப்பினானாம். ஏய்! கார்காந்தா!!—ஏய், சொறிசிரங்கா —ஏ, சிரங்கு மகாராஜா எங்கே உங்கள் இரதகஜதுரகபதாதிகள்? —என்னப்பா! ராஜாவின் அப்பனே போறது? — என்று இவ்வாறெல்லாம், அவனையும் அவன் வளர்ப்புத் தந்தையான பறையரையும் ஊர் கேலி பேசிற்றாம்! பேசாதா, என்ன? கீழ்சாதிக்காரனாயிற்றே! வேண்டிய அளவு பேசிற்று!! அது பொறுக்கமுடியாது, தந்தையும் மகனும் அந்த ஊரைவிட்டே ஓடினராம். காலமும் ஓடிற்று! சிறுவன், வாலிபனானான்!! சிறுவயது ஆசை, பெரிதாகி, மனதைக் குடைய சேடி எனும் அரசுக்கு வந்தானாம். சேடி என்பது,

---

கூனூரில், நீலகிரி கலக்டர் லோபு பிரபு தலைமையில் கடந்த ஜூன் 26ந் தேதி, விழா ஒன்று நடந்திருக்கிறது.

நடத்தியோர், சத்குரு சர்வ சமரச சங்கம், எனும் பெயர் கொண்டோர்.

ஆதித்திராவிடப் பெருங்குடி மக்கள் 30 பேருக்கு, "ஐயர்" எனும் பட்டத்தை ராஜாபகதூர் பிரேந்திர பகதூர் சிங் எனும் பார்லிமெண்டு உறுப்பினர், வழங்கியிருக்கிறார்.

காந்தியடிகள் வழங்கிய 'அரிசனம்' எனும் பட்டத்தைவிட, இதில் புரட்சியிருக்கிறது! இப்படி உயர்சாதிப் பட்டம் வழங்குவதாலேயே, ஏழை ஆதித்திராவிட மக்கள் வாழ்வில் ஏற்றம் கண்டு விடுவார்கள் என்று சொல்ல முடியாது!!

எனினும், மேற்படி சங்கத்தின், ஆர்வம், குறிப்பிடப்பட வேண்டியதுதான்.

இந்தச்சம்பவத்தைக் கண்ணுற்ற போது, ஒரு சரிதச் சம்பவம், கவனத்துக்கு வந்தது.

சாதிக்கேடு, எப்போது முதல் இங்குள்ளது, அதை எதிர்த்து எப்படி யெப்படிப் போராட்டங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை, இச் சம்பவம் விளக்கும்.

அரங்கண்ணல்.

---

பிற்பாடு கலிங்கம் என்று அழைக்கப்பட்ட நாட்டின் ஒரு பகுதி. அங்கே அப்போது இருந்த மன்னன் இறந்துபோய் அவனுடைய இடத்துக்கு ஆளைத் தேடிக்கொண்டிருந்தார்களாம், அவனுக்கு வாரிசு இல்லாததால்! எப்படியோ இவன் கிடைத்தான்—அரசனாக்கப்பட்டான். பழையகால சரிதம்தான் ஒரு புதைபொருளாராய்ச்சியாயிற்றே! அரசனானான் — அவ்வளவுதான் தெரிகிறது, ஆராய்ந்தால். அரசனானதும், எப்படியோ, செய்தி எட்டிற்றாம் ஏழைப் பார்ப்பனச் சிறுவனின் நாட்டுக்கு! உடனே, ஓடோடியும் வந்தானாம், சேதிக்கு. வந்ததும் அந்த ஊரிலிருந்த பார்ப்பனர்களையெல்லாம் திரட்டி முதல் முதலாகத் தெரிவித்த சேதி, "பிராம்மணோத்தமர்களே! உங்கள் ராஜ்யத்தை ஆளவந்திருப்பவன் யார் தெரியுமா, சொறியும் சிரங்கும் பிடித்து அலைந்த பறையன். காலம் பதித்த மாறுதலால் உருவும் திருவும் பெற்று வீரனாகத் தோன்றிய இவனை க்ஷத்திரியனின் இடத்தில் அமர்த்திவிட்டீர்கள். அக்கிரமம்! அப்படிச் செய்யலாமா!!", என்பதுதான். இனித்தான், ஆரம்பமாகிறது, ஆரியத்தின் பாதை.

* * *

"பறையனய்யா, பறையனும் நம்ம ராஜா"

"பேரென்ன தெரியுமோ? கார்காந்து! கார்காந்து என்றால் என்ன பொருள் தெரியுமோ? சொறிசிரங்கன்!!"

"சாதிதான் அப்படியென்றால் பெயர் கூடவா, அப்படியிருக்க வேண்டும்?"

"செச்சே! ஒரு பக்கம் சமணாள்' தொடை தட்டறா — இன்னொரு பக்கம் இப்படிப்பட்ட அக்கிரமம் நடக்கிறதே. பட்டர்வாள்! என்னய்யா செய்றது?"

இப்படி, ஊரில் பேச்சு! பேச்சு மட்டுமா? ஏச்சு வேறு!! இதைப் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான், கார்காந்தன். சகிக்க முடியவில்லை அவனால்! தான் பறையர் குலத்தவன் என்பதால், இவர்கள் படுத்தியபாடெல்லாம் கவனத்துக்கு வந்தது. ஏனிப்படிச் சாதிகள்? இவர்கள் மட்டும் எப்படி உயர்ந்த சாதிக்காரர்களானார்கள்? நாலு சாதி ஏன்? உச்சிக்குடுமியும் பூணூலும் போட்டிருப்பதால், இவர்கள் உயர்சாதிக்காரர்களென்றால் எல்லோரும் அப்படிப் போட்டுக்கொள்ள ஆரம்பித்தால் உயர் சாதிக்காரர்களாகிவிட முடியுமா? —என்று எண்ணலானான். அந்த எண்ணந் தோன்றியதும், தனையும் தன் ஆட்சியையும் தூற்றும் இவர்தம் துடுக்கடக்கவேண்டுமென்னும் ஆர்வம் அதிகமாயிற்று. அதனால் ஒருநாள் திடீரென்று உத்தரவு போட்டான்:

**நாட்டிலிருக்கும் தீண்டாதவர்களுக்கு,**

**கார்காத்து மன்னனாகிய நான் உங்களை எல்லாம் பிராம்மணோத்தமர்களாக்க முடிவு செய்துவிட்டேன். பிராம்மணரெனப்படுவோர் எவ்வெவ்விதம் நடை உடை பாவனைகளில் தென்படுகிறார்களோ, அதுபோல நீங்களும் உங்களை ஆக்கிக்கொள்ள வேண்டியது. நீங்களும் இன்று முதல் என் நாட்டில் பிராம்மணர்கள்தான். இந்த உரிமையை யாராவது மறுத்தாலோ, எதிர்த்தாலோ அவர்களுக்கு அரச தண்டனை கிடைக்கும்.**

முரசறையப்பட்டது, எங்கும்! முணுமுணுத்தனரேயொழிய, பார்ப்பனர் எவரும் அரச ஆக்ஞையை மீறத் துணியவில்லை! அதனால் (Vide P P. 104 of Bharatesvar B. V. Translation "......Karkandu converted the Vasi chandalas into Brahmins) சண்டாளர்கள் எனப்பட்டோரெல்லாம், வேதியர்களாயினர்! சட்டத்தின் முனையில், செய்தான் இதனை. தர்ப்பா சூரர்கள் என்ன செய்ய முடியும். கூடிக் கூடிப் பேசினர்! இவனுடன் போட்டிபோட்டுச் சிறுவயதில் தோற்ற பார்ப்பனவாலிபனுக்கோ, மனமும் உடலும் அருமையால் தகிக்கப்பட்டுக்கொண்டிருந்தது. பக்கத்து நாட்டானிடம் போய் பகைமூட்டிப் போரிடத் தூண்டலாமென்றாலோ, அங்கத்து மன்னன் தாகிவாகனனே ஒரு சமணன்! என்ன செய்வது என்று யோசித்த வேதியர்கள், அரசனுக்குப் பால்ய பழக்கமான பார்ப்பனனை தூது அனுப்பினர். அவனைக்கண்ட 'சொறி சிரங்கனே' கேலியத்தனையும் செய்தான். "டேய்! கீழ்சாதி என்று சொல்லி என்னைச் சிறுவயதில் எவ்வளவு கேலிசெய்திருப்பாய். இப்போது, என் சாதிக்காரர்களையெல்லாம் உயர் சாதிக்காரர்களாக்கிவிட்டேன். பார்த்தாயா?" என்று கேட்டான். வெந்த புண்ணில் வேலைச் சொருகுவதுபோலிருந்தது வேதியனுக்கு! விழிகள் குளமாயின! ஆயினும், "அதுசரி, கார்காந்து. அரசனானதும் ஒரு கிராமம் தருவதாகச் சொன்னாயே. அதைத் தருகிறாயா?"

"சொன்னேன்! அப்படியே தர வேண்டுமோ?"

"பிராம்மணாளுக்குத் தானம் தர வேண்டியது, கீழ்சாதிக்காரருடைய கடமை! அதிலும், நீ, முன்பே தானம் தருவதாக வாக்களித்தவன். தராவிட்டால் என்ன நேரும் தெரியுமோ?"

"என்ன நேரும்? என் தலை இத்து விழுந்துவிடுமா? அல்லது நான் எரிந்து பஸ்பமாகிவிடுவேனா?"

"இப்படிப் பேசுவது, நிரீசுரவாதிகள் பேச்சு. நமது இந்து தர்மத்துக்கு அடுக்காது. ஆண்டவன் தண்டிப்பார். நரகவேதனை கிடைக்கும்......"

"அப்படியா! அய்யரே, அங்க தேசத்து அதிபதி, ஒரு சமணன், அவனிடம்போய், இதையெல்லாம் பேசிப்பாரும். நரகமாவது! தானமாவது!! இந்து தர்மமாவது! உயர்ந்த சாதியாவது!—என்பான் அவனிடம் உங்களால் வாலாட்ட முடியாது. ஆனால், என்னை மிரட்ட முடியும்!"

"அவன் என்ன! யாராயிருந்தாலும் பிராம்மணாளுக்கு மரியாதையும் உபசரணையும் செய்ய வேண்டுமாக்கும்..."

"அப்படியா? சரி! முதலில், தாதிவாகனனிடம் போய் ஒரு கிராமம் தானம் வாங்கிவாருங்கள். பிறகு நான் தருகிறேன்."

கார்காந்து, கேலி பேசினான், அவனை! ஆனால் அந்தக் கேலியைக்கொண்டே இரண்டு அரசர்களுக்கிடையும் சிண்டு முடித்துவிட்டனர், ஆரியர்! சமண மதத்தவன் என்று தெரிந்தும் தாதிவாகனனிடம் சென்றனர். "அரசரே! எங்கள் வேந்தர் கார்காந்து, தங்கள் நாட்டை ஜெயித்து எங்களுக்கு ஒரு கிராமத்தை பரிசளிக்கப் போகிறார்" என்று செப்பினர். விளைவு, அங்கமும் சேதியும் போருக்கெழுந்தன! தாதிவாகனனும், கார்காந்துவும் கட்கமேந்திப் போரில் இறங்கினர்! கடும்போர், நடைபெற்றது ஒரு கானகத்தில். காரகாந்து, தாதிவாகனன் தலையைச் சீவப்போகும் சமயம். ஓடி வந்தாள் ஒரு சமண சந்நியாசினி!

தடுத்தாள் இருவரையும்! ஏறிட்டுப் பார்த்தாள், தாதிவாகனனை — "நாதா! நீங்களா?" என்று அலறினாள். திடுக்கிட்ட தாதிவாகனனும் திரும்பினான், "பத்மாவதி நீயா?" என்று குதித்தோடிக் கட்டிக்கொண்டான். கார்காந்தோ, விழித்தான்! ஆச்சரியம் தோய்ந்த அவன் விழிகளையும், மார்பையும் கண்ட பத்மாவதி திகைத்தாள். யார் நீ?—என்று கேட்டபடியே நெருங்கினாள். அவன் கழுத்தில் கிடந்த ஒரு சின்னத்தைத் தொட்டுப் பார்த்தாள்! "ஆ! மகனே!! நீயா?" என்று கார்காந்துவையும் கட்டிக்கொண்டு கண்ணீர் விடலானாள்.

"அம்மா! நான் பறையன்...உங்கள் மகனல்ல" என்றான் கார்காந்து.

உண்மைதானடா, மைந்தா!-ஒரு நாள்—சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு—நானும் உன் அப்பாவும் இரண்டு யானைகள் மீதேறி பவனிவரச் சென்றோம். நான் ஏறியிருந்த யானை மிரண்டு, என்னைத் தூக்கிக்கொண்டு ஓட ஆரம்பித்தது. உன் தந்தையும் சேனைப் பிரதானியரும் எவ்வளவோ முயன்றும் ஒருவருக்கும் அகப்படாது, வெகுதூரம் போய் ஒரு ஆரண்யத்தில் என்னைத் தள்ளிவிட்டது. அப்போது நான் கர்ப்பம். அங்கிருந்த ஒரு சமண முனிவரின் ஆதரவிலிருந்தேன். நீ பிறந்ததும், நீ எப்படியாவது பிழைத்துக்கொள்ள வேண்டும்—என்னைப்போல் கானகவாசத்தில் அவதிப்படலாகாது என்று ஒரு சுடுகாட்டில் போட்டுவிட்டுப் போனேன். நீ பறையனல்ல!" என்று அவள் சொன்னதைக் கேட்ட, கார்காந்து தந்தையின் காலில் விழுந்தான். தான் கீழ் சாதியில் பிறந்ததால் அடைந்த அவதிகளைச் சொல்லக் கேட்ட அங்க தேசாதிபதி "மகனே! ஆர்யமதத்தின் முதல் கொள்கையே வர்ணாசிரம தர்மம்தான். அது பிடிக்காததால்தான் நாங்கள் எல்லாம் வேறு மதம் சென்றோம். நீ இந்து மதத்தில் சிக்கியதால், இத்தனை தொல்லைகளையும் அனுபவிக்க நேர்ந்தது. இனி வேண்டாம்! நீயும் சமணனாகிவிடு!! இன்று முதல், நமது இருநாட்டுக்கும் நீயே அரசன். நானும் உன் அன்னையும் அன்பு மார்க்கப் பணியிலீடுபடப் போகிறோம்!" என்றான்.

'சொறிசிரங்கனுக்கு'—எல்லாம் கனவுபோலிருந்தது!

வேதியர்களோ, தாங்கள் வைத்த 'வேட்டு' இப்படியாகி விட்டதே என்று வருந்தினர்!

அவர்கள் வகுத்த வஞ்சகப் பாதையால், சமணத்திற்கு, இன்னொரு அரசன் கிடைத்தான்—இன்னொரு நாடும், கிடைத்தது. ஏக்கம் நிறைந்த கண்களோடு அவனைப் பார்த்தனர்! 'பறையன்' பார்வேந்தனாகப் போய்க்கொண்டு இருந்தான்!!"

★

---

4-ம் பக்கத் தொடர்ச்சி

அளிக்கப்படவேண்டிய மதிப்பைக் கூட, 'கொள்கை' என்பதன் பெயரால் சுட்டுப் பொசுக்கும், பண்பு கடந்த சிலகாலமாக அங்கு வளர்ந்து வருவதன் போக்கு நமக்குப் புரியவில்லை' அங்கு மட்டுமல்ல, எங்கெங்கு கம்யூனிஸ்டுகள் உள்ளனரோ, அவர்கள் உள்ளத்தில் இப்படியொரு எண்ணம் வளர்ந்திருப்பதாகவேதெரிகிறது. நெல்லை மாவட்டத்தில், 'காம்ரேடை'யே கொன்றதாக, இன்னும் ஒரு சேதி உலவிக்கொண்டுள்ளது பலருக்கு நினைவிருக்கலாம்!!

அரசு பிழை செய்திடின் வாதிடவும், தனது உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ளவுமே, நீதிமன்றங்களும், விசாரணை அமைப்பும் உள்ளன. குடியரசில், இது, இன்றியமையாத ஏற்பாடாகும். இப்படி நடத்தப்படுகிற விசாரணை,

> பகிரங்கமாக, மக்கள் அறியும்படி, கீழ்க் கோர்டடில் சரியான நீதி கிடைக்கவில்லையெனக் கருதினல் 'அப்பீல்' செய்யும் உரிமையோடு, 'மரண தண்டனை' விதக்கபபட்டால், விதிக்கப்பட்டிருககிறது என்பது அனைவரும் அறியும் விதத்தில்,

இருப்பதுதான், ஜனநாயகம் வழங்கும உரிமையாகும். "இப்படிப்பட்ட உரிமைகள எங்கள் ஜனநாயக நாடுகளில்தான் உண்டு. ரஷ்யாவில் உண்டோ?" எனறு முதலாளித்துவ நாடுகள் ஆர்ப்பரித்துக் கேட்கும்போதெல்லாம், "எல்லாம் உண்டு!" என்று ஒரே மடியாகப் பதில் சொல்லுவதுண்டு. 'ஜனசக்தி' போன்ற ஏடுகள், அதுபற்றிப் பத்திபத்தியாக வர்ணித்து எழுதும்; வார்த்தைகள் அகப்படாவிட்டால், மார்மீதாவது சீறிச் சீறிப் பாயும்; ஆனல், இதோ, நாகியின் பரிதாபம் — முதலாளித்துவ நாடுகளின் வாய்க்குச் சர்க்கரையாகி விட்டது! நம்பிக்கையோடு ஒப்படைக்கப்பட்ட அரசியல் தலைவர்களை—ஒரு நாட்டுக்கே பிரதமராக இருந்தவரை — 'இரகசியமாகக்' கொண்டுபோய் வைத்திருந்து, 'இரகசியமாக' வழக்கு நடாத்தி, "இரகசியமாகவே' தண்டனையையும நிறைவேற்றியிருக்கிறார்கள்.

✱

பொதுவுடைமை — எனும் கொள்கையும், அதற்கு வித்திட்ட மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் போன்றோரின் சிந்தனையுரைகளும், பாட்டாளிகள் உலகுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்று, எங்கெங்கு ஏழைகளிருக்கின்றனரோ அவர்களெல்லாம் கருதிக் கொண்டிருக்கின்றனர். அந்தக் காரணத்தால்தான், முதலாளித்துவ நாடுகள் தவறுகள் செய்யும் போது, "பார், பார் எமது ரஷ்யாவை!" என்று புத்தொளி பூக்கும் கண்களோடு, நாம் எல்லாம் சொல்வதுண்டு. புல்கானினும், குருசேவும் சென்னை வீதிகளிலும், வங்கத்துத்தெருக்களிலும் வாகை சூடிய வீரர்கள்போல் சென்ற போது மக்கள் திரள் திரளாக நின்று 'வாழ்க! வாழ்க! என்று முழக்கமிட்டதும், அதனால்தான. தங்களுக்கு ஒரு இலட்சிய பூமி — தங்களைப் போன்ற ஏழைகளுக்கு வாழ்வளிக்கும் ஒரு தேசம்—என்கிற, எண்ணம், கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேராத ஏழைகள் மனதிலும் கூட இருந்து வருகிறது.

"ரஷ்யாவில், ஒரு சிலர் வைத்ததுதான் தர்பார்! அங்கு பேச்சுரிமையில்லை—எழுத்துரிமையில்லை — எண்ண உரிமை கிடையாது. திடீரென ஒருவரைப் பிடிக்காவிடில், தலையை அறுத்து விடுவார்கள" என்று முதலாளித்துவ நாடுகள் சொல்லும் போதெல்லாம், "முதலாளி நாடல்லவா! இப்படித்தான், தூற்றும்!" என்று, அலட்சியமாகவே, உலகிலுள்ள முற்போக்குவாதிகள் கருதி வந்தனர். குருஷேவ், பதவிக்கு வந்தபின், ஸ்டாலின் திருநாமத்தின்மீது எச்சில் வீசப்பட்டது—பற்பல முக்கிய தலைவர்களுடைய தலைகள் அறுக்கப்பட்டது-முதலான விஷயங்கள், உள்ளத்

தில், ஒரு ஐயத்தை எழச் செய்தது! கம்யூனிஸ்டுகளுக்கு, இப்படியொரு நடைமுறைப் பழக்கம் உண்டுபோலும் என்கிற அச்சம் உருவாகலாயிற்று!!

நாகியின் பரிதாபம், அமெரிக்கா போன்றவைகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்துவிட்டது. ரஷ்யாவை, இலட்சிய பூமியெனக் கருதிக்கொண்டிருந்தோருக்கு, சிக்கலையும் பெருமூச்சையும் உண்டாக்கிவிட்டது. நம் போன்றவர்களுக்கு மட்டுமல்ல,

கம்யூனிசக் கொள்கையினை ஏற்றுக் கொண்டிருக்கும் நாடுகள்,

ஏன்? — பல கம்யூனிஸ்டுகளுக்குக் கூட,

குழப்பத்தையும், தலையிறக்கத்தையும் உண்டுபண்ணியிருக்கிறது.

**இலண்டனில் 50-கம்யூனிஸ்டுகள், மாஸ்கோவின் இந்தப் போக்குப் பிடிக்காமல், கட்சியை விட்டு விலகியிருக்கிறார்கள்!!**

* * *

கணவனும் மனைவியுமாக வாழும் ஒரு குடும்பத்துக்குள்ளேயே, கருத்து வேற்றுமைகள் முளைக்காமல் இருப்பதில்லை. "சினிமாவுக்கு மனைவி போகலாம்!" "கணவன் நாடகத்துக்குப் போகலாமே" என்பது முதல், பல விஷயங்களில், வேற்றுமைகள் ஏற்படத்தான் செய்கின்றன. அதற்காக, ஒருவருக்கொருவர் தலையை அறுத்துக் கொள்ளலாமா!! அதே போல, பலகோடி மக்கள் வாழும் ஒரு நாட்டில், பலதரப்பட்ட கருத்துகள் எழத்தான் செய்யும். ஜனநாயக நாட்டில், இந்தக் கருத்து வேற்றுமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்கிற உயரிய நோக்கத்தின் காரணமாகத்தான், பல அரசியல் கட்சிகள் உலவ இடமளிக்கப்படுகிறது. இந்த உரிமை, ரஷ்யா போன்ற நாடுகளில் கிடையாது என்பார்கள்! தங்களுக்குள் ஏற்படும் கருத்து வேற்றுமைகளை அலசிப் பேசி அதன் முடிவுகளை ஏற்றுக்கொள்ளக் கூடிய கட்சி ஆட்சிமுறையிருப்பதால் இந்தத் தேவை ஏற்படவில்லை என்பார்கள். ஆனால் இப்படிக் கருத்து வேற்றுமைகளைச் சொல்வோர், தலையையே இழக்க நேரும் என்கிற புதுப்போக்கு வளர்ந்து வருகிறதே! இதற்கு என்ன பதில் சொல்லக்கூடும்!!

நாகி, ரஷ்யாக்காரர்கூட அல்ல; இன்னொரு நாட்டுக்காரர். அந்த நாடு, தன் விரலசைவுக்குக் கட்டுப்படக்கூடியதென்பதால், அந்த நாட்டின் பிரதமராக இருந்த ஒருவரின் தலையையே அறுக்குமளவுக்குப் போயிருக்கிறதென்றால்; ரஷ்யாவை இலட்சிய பூமியாகக் காட்டியும், ரஷ்யாவின் உறவு கிடைத்தால் இன்னின்ன லாபம் வருமென்றும், கூறினால், பயம்தானே முதலில் ஏற்படும் மக்களுக்கு!!

"இந்தியாவுடன் ரஷ்யா செய்து கொண்ட பஞ்சசீல் கோட்பாட்டு ஒப்பந்தத்துக்கு, இது முரணானது. பஞ்சசீலம் என்பது, ஒத்துப்போவதாகும். இது பற்றிய விளக்கம் அனுப்புமாறு, பண்டித நேரு, ரஷ்யாவுக்கு எழுதியிருக்கிறார்,"

என்று சொல்லப்படுகிறது! நேருகூட, இதுபற்றி, தன் கருத்துரையை வெளியிட்டுவிட்டார்— ஆனால், இங்குள்ள இந்தியக் கம்யூனிஸ்டுக்கட்சி, நாகிசம்பவம் குறித்து, ரஷ்யாவின் போக்கை ஆட்சேபிக்கவுமில்லை! கண்டனம் தெரிவிக்கவுமில்லை!!

ஜூலையில் கூடப்போவதாகச் சொல்லப்பட்ட இந்தியக் கம்யூனிஸ்டுக்கட்சியின் செயற்குழுவை, ஆகஸ்டுக்கு ஒத்திப்போட்டிருக்கிறார்கள். மாஸ்கோவுக்குப் போயிருக்கும் அஜாய்கோஷ், ஏ. கே. கோபாலன் ஆகியோருக்காகப்போலும் இந்த ஒத்திவைப்பு. எனினும், நாகியின் பரிதாபம்பற்றி, இங்குள்ள கம்யூனிஸ்டுகளிடம் தெளிவில்லை.

பூபேஷ் குப்தா எனும் பார்லிமெண்டு உறுப்பினர், அபிப்பிராயம் எதுவும்தர மறுத்திருக்கிறார். ஆனால், பார்லிமெண்டு எதிர்க்கட்சித்தலைவரான டாங்கே, "மரண தண்டனைகளைத் தவிர்த்திருக்கலாம்," என்கிறார். இன்னொருவரான பி. சி. ஜோஷியோ, "அதனால் என்ன தவறு?", என்று கேட்கிறார். இப்படி கருத்து முரண்பாடுகளும், மௌனமும், ஏற்பட்டிருப்பதிலிருந்து அங்குள்ள சிக்கல் புரியும். எசமான விசுவாசம் ஒரு பக்கம்! நிதி, இன்னொரு பக்கம்!!— கம்யூனிஸ்டுகள் கடைசியில், எசமான விசுவாசத்துக்குத்தான், அடிபணிவார்கள் என்பது தெரிந்தது தானே.

இப்படி அடிபணிவதே கம்யூனிஸ்டு இயக்கத்தின் முதற்கொள்கை என்று, கம்யூனிஸ்டுகள் என்போர் கருதிக்கொண்டிருக்கிறார்கள்! மாஸ்கோ, ஸ்டாலின் படத்தை வை என்றால் வைப்பதும், எடு என்றால் எடுப்பதும், கும்பிடு என்றால் கும்பிடுவதும், குத்து என்றால் குத்துவதும் அல்ல பொதுவுடைமை.

பொதுவுடைமை—என்பது ஒரு சித்தாந்தம்.

அதன் நற்கொள்கைகளை நாட்டுக்கேற்றபடி, ஏற்றுக்கொள்வதே விவேகம்.

அது ஒரு சாஸ்திரமல்ல; கொள்கை! அது, காலத்தையனுசரித்து, மாறும்.

பொதுவுடைமையின் எண்ணங்களை ஏற்றுக்கொண்டிருக்கும் பல முற்போக்குக் கட்சிகள், இதே அடிப்படையில்தான் இயங்குகின்றன, தி. மு. க.வும் அப்படித்தான்.

யுகோ நாட்டு டிட்டோ மாஸ்கோவுக்கு எடுபிடியல்ல; எனினும் அவர் நாட்டில், பொதுவுடைமை மணம் வீசத்தான் செய்கிறது.

எனினும், கம்யூனிஸ்டுகள் என்போர், ஏதோ ஒரு மாதிரியான நெறியினைத் தங்களுக்கு வகுத்துக் கொண்டுள்ளார்கள்! அவர்களுக்கு மாஸ்கோவே, வேதபுத்தகம்—அரிச்சுவடியாவும்!!

இந்தச் சுபாவத்தையும், எதையும் இரத்த மூலமும் 'கொலை'கள் மூலமும் சாதிக்கும் எண்ணத்தையும், கம்யூனிஸ்டுகள் என்போர் அறவே அகற்றிக்கொள்ள வேண்டும்.

எப்போதும் மாற்றாரை, ஏசியும் தூற்றியுமே வரும் "ஜனசக்தி" போன்றவைகளைக் காண்போருக்கு இந்த ஆசை அதிகரிக்கத்தான் செய்கிறது! அங்கிலை வருமா!!